விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஆடி 21 உ செவ்வாய் (5-8 69) ஐ. அவ்வல் 20 புத்தகம் 23 இதழ் 40




## தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக

# இதோ மற்றோர் பாரபட்சம்!

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களின் பிறப்பு இறப்பு திருமணப்பதிவுகளைத் தமிழில் பதிவு செய்வதற்கு வசதிகளைச் செய்து தரும்படி தமிழ் பேசும் மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்து விட்ட அரசாங்கம், வடக்கு, கிழக்கு உட்பட தமிழில் பதிவுகள் நடைபெறும் பிரிவுகளில் வாழும் சிங்கள மக்களின் பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகளை சிங்களத்தில் பதிவு செய்வதற்கு விழுந்தடித்துக்கொண்டு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறது என்பதற்கு இதை விடவேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் கேட்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே கொழும்பிலும், ஏனைய சிங்களப் பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களது பிறப்பு இறப்பு விவாகப் பதிவுகள் யாவும் தனிச் சிங்களத்திலேயே பதியப்பட்டு வருவது தெரிந்ததே. தமிழ் பெயர்கள் சிங்களத்தில் பதிவு செய்யப்படும் போது தப்பும் தவறுமாக பதியப்படுவதால் தமிழ் மக்கள் மிகுந்த தொல்லைப்படுகின்றனர். இது உள்நாட்டமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு தமிழ் மக்களின் பதிவுகள் தமிழில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யும்படி கோரிய போது, உள்நாட்டமைச்சர் திரு. தகநாயகா கையை விரித்துவிட்டார். அது மட்டுமின்றி சிங்களவர்களின் பெயர்களை தமிழில் பதிவு செய்த குற்றத்துக்காக தமிழ்ப் பகுதி பதிவாளர் சிலர் தண்டிக்கப்பட்டனர்.

இப்பொழுது தமிழில் பதிவு நடைபெறும் பிரிவுகளில் வாழும் சிங்கள மக்களின் பிறப்பு இறப்பு பதிவுகளை சிங்களத்தில் பதிவு செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின்நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களது இன்றியமையாத மொழியுரிமையை வழங்க மறுத்துவிட்ட ஆட்சியாளர்கள் தமிழ்ப் பகுதியில் வாழும் சிங்கள மக்களுக்கு மட்டும் சிங்களத்தில் பதிவு செய்ய வசதி செய்து கொடுத்திருக்கும் செயல் அவர்களது பாரபட்சமான போக்குக்கு எடுத்துக்காட்டு என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் கூறின.

## வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் பகுதிக்கு பட்டைநாமம்!

அரசாங்கத்தின் புதிய புதிய வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்ப் பகுதி அபிவிருத்தி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு போதிய நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு எவ்வித விசேட நிதியும் ஒதுக்கப்படவில்லை என்பதும் அதே சமயம் புத்தளம் சீமெந்து ஆலைக்கு ரூபா 28 லட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(9ம் பக்கம் பார்க்க)

## தினபதி மீது 'அமிர்' கிளப்பிய உரிமைப் பிரச்சினை!

தினபதி பத்திரிகைமீது ஜூலை 31ந் திகதி பாராளுமன்றத்தில் உரிமைப் பிரச்சினையொன்றை தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு அ. அமிர் தலிங்கம் கிளப்பினார். அப்போது அவர் கூறியதாவது:-

''அரியணை உரை விவாதத்தின் இறுதிநாளன்று (ஜூலை 25ந் திகதி) பிரதம மந்திரி நிகழ்த்திய பேச்சு என்ற முறையில் 'தினபதி' என்னும் தமிழ்த் தினசரி ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

தாம் பிரதமர் பதவியிலிருந்து ராஜினுமா செய்ய முன் வந்ததாகவும், அப்படிச் செய்யவிடாது தமிழரசுக் கட்சியே தம்மைத் தடுத்து நிறுத்தியதாகவும், அதை இல்லையென்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எவரும் மறுக்க முடியுமா என்று சவால் விட்டதாகவும் அர்த்தப்படும்படி பிரதமர் இச் சபையில் பேசியதாக ஜூலை 27ந் திகதி தினபதியில் வெளிவந்த அச் செய்தி கூறுகிறது.

(9ம் பக்கம் பார்க்க)

## குருநாக்கலில் தமிழ் கடைகள் உடைக்கப்பட்டன; தமிழர் அச்சம்!

குருநாக்கல்பகுதியில் வாழும் தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. இதனுல் அவர்கள்மிகுந்த பீதியடைந்துள்ளதுடன் இனக்கலவரம் ஒன்றைத் தூண்டுவதற்கு ஒத்திகை முயற்சியா இதுஎன்று கேட்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன் தமிழர்களின் இரண்டு தேநீர் கடைகள் சிங்களக்காடையர்களால் கல் எறியப்பட்டு உடைக்கப்பட்டன என்று தெரிகிறது.

காவல் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டும் யாதும் நடவடிக்கை எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. ஏன் சம்பவம் நடக்கும் போதே வீதியில் நின்று கொண்டிருந்த இரு சிங்களக் காவலர்கள் மெல்ல நழுவிச் சென்று விட்டார்களாம்.

இதை அடுத்து குருநாக்கல் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் இரு தமிழ் ஆசிரியர்களை ஒரு சிங்களக் காடையன் தூஷண வார்த்தைகளால் ஏசிப் பயமுறுத்தியிருக்கிருன். கள்ளத் தோணிகளே! உங்களுக்கு இந்தநாட்டில் என்னவேலை. விரைவில் மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுங்கள்; இல்லையேல்கொலை செய்யப் படுவீர்கள் என்று கூறி அந்த ஆசிரியர்களை பயமுறுத்தியிருக்கிருர்கள்.

இது நடைபெற்ற ஒரு கிழமையில் வேறு இரு ஆசிரியர்கள் இப்படியே பயமுறுத்தப்பட்டிருக்கிருர்கள்.

(9ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு வேட்பாளர். பட்டியல்!

அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் பற்றி இன்னும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் தமிழரசு ஆதரவாளரிடையே குழப்பத்தை மூட்டி விடும்நோக்குடன் வேட்பாளர் நியமனம் பற்றி தினசரிகள் வெளியிடும் கற்பனைச் செய்திகளில் சிறிதளவும் உண்மை கிடையாதென்றும் தமிழரசு வேட்பாளர் பட்டியல் விரைவில் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்றும் கட்சித்தலைமைப் பீடம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்துள்ளது.

## செல்லக் கதிர்காமத்துக்கும் வருகிறது ஆபத்து!

இந்துக்களின் ஆதிக்கத்திலுள்ள பழம் பெரும் வழிபாட்டுத்தலமான செல்லக் கதிர்காமத்தையும் அடாத்தாகப் பறிக்கும் முயற்சியில் பௌத்த சிங்கள வெறியர்கள் இப்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. பழம் பெரும் இந்து ஆலயங்களை வன்முறைமூலம் கைப்பற்றும் இனமத வெறியர்களின் திட்டங்களுக்கு முதலாளித்துவப் பத்திரிகை ஒன்றும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில பிரமுகர்களும் உதவியும் ஒத்தாசையும் அளித்து வருவதாக சொல்லப்படுகிறது.

சிங்கள பௌத்த வெறியர்களின் இத்தகைய வன்முறைச் செயல்களுக்கு பிரதமர் உடனடியாக முற்றுப் புள்ளி வைக்காவிட்டால் அது இன, மத கலவரங்களுக்கு வழி வகுக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கதிர்காமம் கதிரமலையிலுள்ள முருகன் ஆலயம் பௌத்தபிக்கு ஒருவரால் அடாத்தாக பறிக்கப்பட்டதும் அதையொட்டியவழக்கு இப்போது உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதும் தெரிந்ததே.

இது இப்படியிருக்க, செல்லக் கதிர்காமத்தில் மாணிக்கப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ள காணியில் சென்றவாரம் இரவோடிர

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

# இழந்த தன் நாட்டையே மீட்காத தமிழன் நிலவைப் பிடித்ததில் களிப்படைய முடியுமா?

## அழிவை நோக்கிச் செல்லும் உலகை காக்கும் தகமை தமிழுக்கே உண்டு!

இன்று காலை ஒரு நண்பர் என்னைப்பார்த்து 'மனிதன் நிலாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறன் — உங்களுக்கு மாநாடு ஒரு கேடா? மனிதன் முன்னேறிவிட்டான் என்று பெருமைப்பட வேண்டிய நேரத்தில் தமிழுக்கு மாநாடாவது மண்ணுங்கட்டியாவது' என்று சற்றுக் கிண்டலாகவே பேசினர். எனக்கு அவர் சொற்களைக் கேட்க சிரிப்பாகவும் இருந்தது. சினமாகவும் இருந்தது.

நடுத்தெருவில் நிற்கின்ற பிச்சைக்காரன் பக்கத்தில் ஓங்கி வளர்ந்திருக்கின்ற மாளிகையின் ஐந்தாவது மாடியிலே அந்த மாளிகையின் சொந்தக்காரன் தன் மனைவியோடு நின்று கொஞ்சிக் குலாவுவதைப்பார்த்து 'ஆகா மனிதன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறன்' என்று கூறுவது எவ்வளவு சிரிப்புக்குரிய சங்கதியோ, அதே போலத்தான் வாழ்வு கெட்டு உரிமைகளற்ற பிச்சைக்காரனுக தாழ்வுற்று அடிமையாக நிற்கும் தமிழ் மகன், அமெரிக்காக்காரன் நிலாவில் நிற்பதைப்பார்த்து 'மனிதன் முன்னேறிவிட்டான்' என்று கூறுவது ஆகும் என்று நான் எனது நண்பரிடம் கூறினேன். நண்பர் அப்புறம் பேசவேயில்லை.

### யோக்கியதை உண்டா?

தன்னுடைய நாட்டையே இன்னும் பிடித்து வெற்றிக் கொடி நாட்டாத தமிழனுக்கு நிலாவைப் பிடித்த அமெரிக்கனின் வெற்றியில் களிப்படையவும் பெருமைப் படவும் என்ன யோக்கிதை இருக்கிறது. அமெரிக்க நாட்டின் வெற்றி அறிவியலுக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றி என்பதில் எனக்கு அணுவளவும் கருத்துவேறுபாடில்லை. ஆனல் என்னுடைய தனிக்கருத்து ஒன்று உண்டு: மனிதனின் இந்த வெற்றி எல்லாவகையிலும் மனிதனுக்கு ஒரு பெரிய வெற்றிதான் என்று நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன்.

ஒரு காலத்தில் கந்துகின்ற குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு தாய் கண்ணடியை எடுத்துவந்து அந்தக் கண்ணடியிலே குழந்தைக்கு வானத்து நிலாவைக் காட்டுவாள்: குழந்தை கண்ணடியில் நிலாவைப்பார்த்து களிபூத்து—அழுகையை மறந்து கைகள் அடித்துச் சிரிப்பான். அவ்வளவு அழகான பொருளாக நேற்று நிலா இருந்தது. தலைவன் தன்னுடைய மார்பில் தலைவியின் முகத்தைச் சாயவைத்து—அந்தத் தங்க முகத்தில் தன் இதழ்களைத் தோயவைத்து கண்ணே உன் முகம் பொன்னிலாவைக்காட்டுகிறதடி 'என்று புகழுரையும், மகிழுரையும் பொழிந்து தள்ளுவான்.

### பத்தாண்டின் பின்நிலையென்ன?

இந்த அழகான நிலாவை இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்பு நான் பார்க்க முடியுமா? இல்லை, இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்பு பயந்துகொண்டே நிலாவை மனிதன் பார்ப்பான். எந்த நாட்டின் குண்டுகள் இந்த நிலாவில் இருந்து வருமோ என்று அப்போது மனிதன் எழில் நிலாவை நடுங்கிக் கொண்டே பார்ப்பான். குழந்தையின் அழுகையை நிறுத்திய நிலாவில் இருந்து ஆயிரம் ஆயிரம் குண்டுகள் பூமியை நோக்கி அப்போது புறப்படலாம்! அன்பின் முழுவடிவமான பெண்ணின் முகத்துக்கு உவமிக்கப்பட்ட நிலாவில் இருத்து அணுகுண்டுகள் பூமிமீது அள்ளி வீசப்படலாம்.

அழகுக் குளமாக இன்று காட்சியளிக்கும் நிலா நாளை வெறிபிடித்த மனித மிருகத்தின் ஆயுதத்தளமாகக் காட்சியளிக்கும்போது 'மனிதனின் முன்னேற்றம்' பற்றி இந்த உலகம் என்ன பேசப் போகிறதோ எனக்குத் தெரியவில்லை.

## 10 ஆண்டுகளின் பின் நிலவைப் பார்க்க மனிதன் நடுங்கும் நிலை தோன்றும்!!

### குழப்பமான வாழ்க்கை

நேற்று நான் கொழும்பு மாநகரின் செல்வத் தெருவான செட்டித்தெருவால் நண்பரொருவருடன் சென்றுகொண்டிருந்தபோது ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் அழுக்கு உடைகளோடு கலைந்து அழுக்கேறிய கூந்தலோடும் வியர்வையும் துன்பத்தின் கோடுகளும் படிந்த முகங்களோடும்

கவிஞர்
**காசி. ஆனந்தன்**

எதிரே வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் வெள்ளை நிற மேனி உடையவர்களாக இருந்தார்கள். நண்பனைப் பார்த்து; 'இவர்கள் யார்? மேனட்டுக்காரர்கள் போலிருக்கிறதே' என்று கேட்டேன். நண்பர் அவர்களைப்பார்த்துச் சிரித்துவிட்டு 'ஆமாம்...இவர்கள் மேனட்டுக்காரர்கள்தான் — அமெரிக்கநாட்டைச் சேர்ந்தவர்கள். 'ஹப்பீஸ்' என்று இவர்களுக்குப் பெயர். நல்ல பணக்காரர்கள். ஆனல் வாழ்க்கை குழப்பமானது என்பதை உணர்ந்து உலகம் எல்லாம் இப்படித் தெருத்தெருவாக வெறுப்புற்ற நிலையில் அலைகிறார்கள்' என்று சொன்னர் நண்பர்.

வட்ட நிலாவுக்குப் போகின்ற அமெரிக்க மனிதனை எண்ணிப் பெருமைப்படுகிறவர்கள் செட்டித் தெருவுக்கு வந்து அலங்கோல வடிவத்தில் சுற்றுகிற அமெரிக்க மனிதனை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ்ப்பட்ட ஒரு நாட்டை எடுத்து வைத்து நான் வெறுப்புறப் பேசுகிறேன் என்று யாரும் தவறுக நினைத்துவிடக் கூடாது. மேல்நாட்டிலெல்லாம் சாதாரண மனிதனின் வாழ்க்கை குழம்பிக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்து விளக்கவே இவையெல்லாம் நான் சொன்னேன்.

அன்பு கெட்டு, அறம் கெட்டு அறிவுப்பாதை என்று சொல்லிக்கொண்டு மேனட்டார் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் மணவிலக்குகளும் பதினுயிரம் கொள்ளைகளும் கொலைகளும் அந்த நாடுகளில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்த வேளையில்தான் தமிழின் அருமையும் தமிழ்க் கலையின் அருமையும் தமிழ்ப்பண்பாட்டின் அருமையும்பற்றி நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏனைய மொழிகளெல்லாம் உதட்டின் நுனியிலே உருவாகின. தமிழ்மொழியோ உள்ளத்தின் அடியிலே தோன்றியது. பிள்ளை தாயில் இருந்து வெளிவந்ததும் பாசத்தோடு இயற்கை உணர்வோடு 'அம்மா' என்று அழுத வேளையில் 'அம்மா' என் அன்புமொழியாகப் பிறந்த மொழி அழகு தமிழ்மொழி.

ஏனைய கலைகளெல்லாம் உடலுணர்ச்சியைத் தூண்டி மனிதனைப் புறமயக்கத்தில் ஆழ்த்துவனவாக விளங்கின. தமிழ்க் கலைகளோ உள்ளத்தின் உள்ளே தோன்றி மனிதனை உருகவைக்கும் இசையாக நடனமாக சிற்பமாக மிளிர்ந்தன.

தமிழ்ப் பண்பாடும் இப்படித்தான். மனிதனின் உள்

(11ம் பக்கம் பார்க்க)

# மட்டுநகர் கண்ட முத்தமிழ் விழா!

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை ஆண்டுதோறும் நடாத்தும் முத்தமிழ் விழா ஜூலை 19ம் திகதிமுதல் 21ம் திகதிவரை மிகக்கோலாலகலமாக நடைபெற்றது. காலை நிகழ்ச்சிகள் கலாசாலை மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் கலாசாலை முன்றிலில் அமைந்த அழகான முத்தமிழ் அரங்கிலும் நடைபெற்றன.

முதலாம் நாள் காலை நிகழ்ச்சிக்கு கலாசாலை அதிபர் திரு. சு. திருஞானசம்பந்தர் தலைமை வகித்தார். கலாசாலை மாணவன் திரு. ச. தெட்சணமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினர். பின்வரும் பேச்சுக்கள் இடம் பெற்றன.

திரு. பொ. சின்னத்துரை பீ. ஏ. 'நாவலரும் தேசிய எழுச்சியும்' திரு. அ. மாணிக்கவாசகர். 'வள்ளுவர் யார்? திரு. இ. தர்மலிங்கம் 'பூம்புகார் காட்சிகள்'

மாலை நிகழ்ச்சிகளுக்குப் பண்டிதர் வி. சீ. கந்தையா தலைமை வகித்தார். 'கலித்தொகையிற் பொருளியல்' என்ற தலைப்பில் சுவையானதொரு ஆராய்ச்சிச் சொற்பொழிவை திரு. இ. தில்லைநாயகம் பீ. ஏ. அவர்களும், 'இலக்கியப் பாதையிற் பல்லவர்கள்' என்ற தலைப்பில் மற்றுமொரு ஆராச்சிச் சொற்பொழிவை பண்டிதர் ம. நாகலிங்கம் பீ. ஏ. அவர்களும் ஆற்றினர்கள். அதைத் தொடர்ந்து தாண்டவன்வெளி பெண்கள் பாடசாலை அளித்த 'அம்பை வென்ற அன்பு' என்ற ஓரங்க நாடகமும், கலாசாலை மாணவிகள் அளித்த 'முருகன் என் காதலன்' 'நரகாசுரன் வதம்' ஆகியநாட்டியநாடகங்களும் சங்கீதபூஷணம் திரு. தங்கராசா அவர்களின் சங்கீதக் கச்சேரியும் இடம்பெற்றன.

### 2ம் நாள்

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். 'குறுகத் தறித்த குறள்'' பற்றி ஆசிரியசிரோன்மணி வே. சாமித்தம்பி அவர்களும், உரையாற்றினர்கள். நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது ''தமிழ் இனிப்பதேன்'' என்றதலைப்பில் இடம்பெற்ற கவி அரங்கு.

மாலை நிகழ்ச்சிகளில் 'புதுத்தமிழ்' என்ற பொருள்பற்றி வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா அவர்களும், 'இலக்கியமும் சமூக அமைப்பும்' என்ற பொருள்பற்றி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் உரை நிகழ்த்தினர்கள். அதைத் தொடர்ந்து கிழக்கிலங்கை இசை நடனக் கலைக்கோவில் மாணவிகளின் நடனமும், கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் அளித்த 'தட்சாயணி கல்யாணம்' என்ற நாட்டுக் கூத்தும் இடம்பெற்றன.

### இறுதி நாள்

இறுதிநாள் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமான காலை நிகழ்ச்சிகளில் கலாசாலை மாணவி செல்வி. சி. ஜெயமணி ''கவிச்சக்கரவர்த்தி கம்பன்'' என்ற தலைப்பிலும் திரு. ம. சிவநேசராசா பீ. ஏ' அவர்கள் 'கம்பனின் வாலி' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்கள். இறுதி நிகழ்ச்சியாக ''இராவணனுக்குச் சிறந்த தம்பி கும்பகர்ணனு? விபீடணனு?' என்ற தலைப்பில் சுவையானதொரு விவாதம் இடம்பெற்றது.

மாலை நிகழ்ச்சிகளுக்கு எக்கச்சக்கமான கூட்டம் வந்திருந்தது: நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்திருந்தன. மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அளர்கள் தலைமைவகித்தார்கள்.

''இளங்கோவின் மாதவி'' பற்றி திரு. வி. இராசலிங்கம் பீ. ஏ. அவர்களும், ''பாரதி தத்துவக் கண்ணேட்டம்'' பற்றி கிழக்குப் பிராந்திய பிரதமகல்வி அதிகாரி ஜனப். சமீம் அவர்களும் அரிய சொற்பொழிவாற்றினர்கள். ஜனப். சமீம் அவர்களின் புதுமைக் கருத்துக்களை சபையோர் வெகுவாக ரசித்தார்கள் என்பதை அவதானிக்க முடிந்தது.

கலைநிகழ்ச்சிகளில் இடம்பெற்ற செல்வி. நா. திருமகள் தேவியின் இன்னிசையும் சபையோரைப் பரவசப் படுத்தின, ஜீவம் சகோதரர்களின் மெல்லிசையும் சபையோரைப் பரவசப் படுத்தின. மட்டக்களப்பு கல்வி [illegible] நகைச்சுவை நாடகமும், மட்டக்களப்பு தமிழ் கலா மன்றம் அளித்த ''அப்போலோ 12'' என்ற நகைச்சுவை நாடகமும் சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தன. இறுதியாகக் கலாசாலை மாணவர்கள் அளித்த 'குருக்கேத்திரன் போர்' என்ற நாட்டுக் கூத்து கண்ணுக்கு விருந்தாக அமைந்தது.

விழா முடிவில் சபையில் இருந்தவர்கள் சிலர் உதிர்த்த கருத்துக்கள் இவை:—

''என்னதான் இல்லாவிட்டாலும், நம் நாட்டில் தமிழ் விழாக்களுக்கு 'மட்டும் பஞ்சமில்லை.

''இந்த விழாக்களினுல் என்ன பிரயோசனம்? பிற நாடுகளின் ஆராய்ச்சி, சந்திரனில் காலடி எடுத்து வைக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கும்போது, நம்முடைய ஆராய்ச்சி இன்னமும் வாலி, சுக்கிரீவன், விபீடணன், மாதவி, கண்ணகி பற்றியதாகவே இருக்கிறதே. இலக்கியத்திலாவது நம்மவர்கள் பழைய சரக்கை விட்டு விட்டு சிறுகதை, நாவல், நாடகம் பற்றிய புதுமை விஷயங்களில் இறங்கமாட்டார்கள் போலிருக்கிறதே''

இந்தப் பேச்சுக்கள் காதுகளில் விழாமல் ஒலி பெருக்கி பலமாக அலறிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நா. கந்தையா,
ஒட்டமாவடி.

கே: உலகத்திலும் பெரியவர் யார்?

ப: சந்திரமண்ணில் உலவி, உணவருந்தி விட்டு திரும்பியிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்கள்!

கே: வானத்திலும் உயர்ந்தது எது?

ப: தன் மானம்!

கே: காற்றினும் பார்க்க கடியவேக முடையது எது?

ப: வதந்தி!

ஃ

என். முருகேசன்,
சுந்தரராசா,
சதர்லேண்ட்.

கே; ஜனுப் அசிசுக்கும் தொண்டமானுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: முன்னவர் பாகிஸ்தானியர்; பின்னவர் தமிழர்! முன்னவர் சோசலிச மனப்பான்மை கொண்டவர்; பின்னவர் முதலாளித்துவத்தின் கையாள்!

ஃ

ஏ. ருஜ்
ஏபுரம்.

கே: தமிழரசுக்கட்சி இந்த நாலு வருடங்களாக தமிழ் மக்களுக்கு என்ன நன்மை செய்தது என்று கேள்வி கேட்பவர்கள் யூ. என். பி. அதாவது டட்லி ஆட்சி இந்த நாலு வருடத்தில் தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என்று கேள்விக்கணைகள் தொடுக்க ஏன் பின் வாங்குகிருர்கள்!

ப: எப்பாடுபட்டாலும் தமிழரசுக் கட்சியை அழிக்கவும் யூ. என். பியை ஆட்சியில் வைத்திருக்கவும் ஆசைப்படுபவர்கள் அப்படியொரு கேள்வியை எப்படிக் கேட்பார்கள்?

கே: இன்று தமிழ் மக்கள் இருக்கும் நிலையில் புதுப்புது தமிழ்க்கட்சிகள் ஆரம்பிக்கப்படுவது புத்திசாலித்தனம் தானு?

ப: தேர்தல் வரப்போகிறதல்லவா? புதியகாளான்கள் தோன்றத்தானே செய்யும்? தமிழினத்தின் நன்மையை யார் கவனிக்கிருர்கள்?

கே: தமிழர்களிடையே புதுப்புது கட்சிகளை ஸ்தாபித்து விட்டு விளையாட்டுப் பார்ப்பதற்காக தென்னிலங்கை சிங்கள முதலாளிகள் சிலர் மறைமுகமாக பண உதவி செய்கிருர்களாமே சிலதமிழர்கட்கு?

ப: இதிலென்ன ஆச்சரியம்? தமிழர்கள் தமிழரசுக் கட்சியின் கீழ் ஐக்கியப்பட்டு நிற்பதை எப்படியும் உடைக்க வேண்டுமென்பதுதானே சிங்களவர்களின் நோக்கம்!

கே: நிலாபயணத்தில் வெற்றியாருக்கு? றஷியாவுக்கா? அல்லது அமெரிக்காவுக்கா?

ப: மனிதவர்க்கத்துக்கு!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல்.

கே: பொய்யான உடம்புக்கு மெய் என்று பெயரிட்டது ஏன்?

ப: முழுப்பொய் சொல்லித் திரிபவனை அரிச்சந்திரன் என்றும், அரைச்சல்லி கூடக் கொடுக்காத மகாகஞ்சனை 'வள்ளல்' என்றும் கேலிக்கு சொல்வதில்லையா? அதுபோலத்தான் பொய்யான உடம்பும் 'மெய்' என்றுயிற்று!

கே: வாழ்க்கையென்பது யாது?

ப: பிறப்புக்கும் இறப்புக்குமிடையே நடைபெறும் ஓர் அருமையான நாடகம்!

கே; தங்களுக்கு யூ. என். பி. ஆட்சியில மந்திரிப்பதவி கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

ப. யூ. என். பி. மந்திரிகள் இதுவரை உலகில் போகாத இடம் சந்திரமண்டலம் ஒன்றுதான். எனவே அந்தக் குறையை போக்குவதே எனது வேலையாக இருக்கும்!

கே. இராசமணி,
நோர்வூட்.

கே: உலகில் இன்று ஆகக் கூடிய விலை மதிப்புள்ள பொருள் எது?

ப: சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட மண்ணும் பாறைத்துண்டுகளும்!

கி. தவமலர்,
யாழ்ப்பாணம்.

கே: 1965ம் ஆண்டு மந்திரிப்பதவிக்காக டட்லியின் காலில் செல்வா மண்டியிட்டதாக எழுதியிருக்கிறதே ஒரு மஞ்சள் பத்திரிகை. பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். செல்வா மந்திரியாக வேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தால் 1960ம் ஆண்டிலேயே ஏன் அதற்கு முன்பே கூட மந்திரியாகியிருக்கலாம். 1965ம் ஆண்டு மார்ச் மாதம் செல்வாவின் காலில் டட்லியே மண்டியிட்டதாக எதிர்க்கட்சியினர் பல தடவைகளில் கூறியுள்ளனர். பெரிய சேனநாயகாவிடம் மந்திரிப்பதவிக்காக மண்டியிட்டு தமிழனுக்கு அழியாத களங்கத்தை ஏற்படுத்தினுர் தனிப்பெருந் தலைவர். 1960, 1965ம் ஆண்டுகளில் அதே பெரிய சேனநாயகாவின் மகனை தனது காலில் மண்டியிட வைத்ததன் மூலம் தமிழினத்துக்கு தனிப்பெருந்தலைவர் ஏற்படுத்திவைத்திருந்த அக்களங்கத்தை துடைத்து விட்டார் செல்வா. இதை எவரும் மறுக்க முடியாது.

---

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
94, ஏ பண்டாரநாயக்கவீதி,
கொழும்பு-12.

---

# நெப்போலியன் கதை

(3)

தீவிலே பிறந்தான்—தீவிலே இறந்தான்! ஆனுல் கார்சிகா தீவு போதுமானதாக இருக்கஇயலுமா, அளவற்ற ஆற்றல் கொண்டோனுக்கு! பிரான்சு சென்ருன்! ஐரோப்பா அழைத்தது! எகிப்து அழைத்தது! வீரக் கோட்டங்களில் உலவினுன்!

தீவிலே இறந்தான்—எலினு தீவில்! ஆனுல், அவனியோர் கண்டு அதிசயிக்கத்தக்க ஆற்றலரசனுக்குப் போதுமான இடமா, எலினு தீவு! எப்படிப்பட்ட கல்லறை!! அதற்கு ஏற்ற இடம், பாரிஸ் அல்லவா? அங்கு தான் கொண்டு போகப்பட்டது, நெப்போலியனின் உடல்.

கார்சிகாவிலிருந்து பாரிஸ் பாரிசிலிருந்து எலினுதீவு, எலினு தீவிலிருந்து பாரிஸ்! இந்தப் பயணம், கேட்போர் வியப்படையத்தக்க நிகழ்ச்சிகள் கொண்ட காப்பியமாகி விட்டிருக்கிறது.

"புறப்பட்டு வருகிறேன் மகனே! நெடுந் தொலைவு என்கிருர்கள். வழியிலே இறந்து விடுவேன் என்று சொல்கிருர்கள். இறந்தாலும் பரவாயில்லை, பயணத்திலே இறந்தால், இப்போது இருப்பதைவிட உனக்கு அருகாமையில் இருப்பேனல்லவா! அதுபோதும் மகனே! புறப்படுகிறேன்';—என்று, நெப்போலியனுடைய தாயார் லெடிசா அம்மையார் கடிதம் அனுப்பினுர்கள்—எலினு தீவுக்கு.

கடிதம் எழுதப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு நெப்போலியனுக்குக் கிடைத்தது. படித்துப் படித்துப் பாகாய் உருகினுன். அன்னையோ, நெடுந் தொலையில், ரோம் நகரில்! எலினு தீவு சென்று மகனுடன் தங்கி இருக்க அனுமதி கிடைக்கவில்லை: மகனைப் பிரிந்து மனமுடைந்த நிலையில் லெடிசா, இருந்து வர நேரிட்டது.

குடும்ப பாசம் மிகுதியும் கொண்டவர்கள், கார்சிகா தீவு வாழ் மக்கள். கார்சிகா தீவு, பிரான்சு நாட்டு ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது—ஆனுல், அது தனியான தீவு! அந்தத் தீவு, அரசுரிமை பெற வேண்டும் என்ற விடுதலைக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில்தான், நெப்போலியன் பிறந்தான். அவனுடைய தந்தை, விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர். அந்தக் கிளர்ச்சியை நடாத்தி வந்த பாயொலி எனும் தலைவனுக்குத் துணை நின்று போரிட்டவர்.

தொட்டிலிலே நெப்போலியன் கிடந்தபோதே, போர்ச் சூழ்நிலை. அந்தத் தீவிலே.

தாலாட்டாக அமைந்த பாட்டே, விடுதலைப்போர் குறித்ததாக இருந்தது என்று கூறலாம்.

தொட்டிலிலே படுத்திருக்கும் குழந்தை, கால்களால் உதைக்கிறது! எதை? வெறும் காற்றுத்தானே தட்டுப்படுகிறது! ஆனுல் எதிர்காலத்திலே, மணி முடிகளைப் பந்தாடப் பழகிக் கொள்கின்றன போலும், அந்தக் கால்கள்! கைகளை ஆட்டுகிறது, எதனையோ, பிடித்துக் கொள்ள முனைவதுபோல! என்ன வேண்டும் இந்தக் குழந்தைக்கு? விளையாட்டுக்கான பொம்மைகளா! தின்னப் பழமா!—இப்போது அவை போதும். ஆனுல், அந்தக் கரங்கள், போரிடப் போகின்றன பல அரசர்களுடன்—வலிவு பெற்றதும்—அதற்கு இது ஒத்திகை போலும்.

லெடிசா, குழந்தையிடம் கொஞ்சிக் குலவாமலிருந்திருக்க முடியாது—ஆனுல், அதற்கு அதிக நேரம், ஓய்வு கிடைத்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான், விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்த கணவன்; குடும்பம் நடந்திட வழிதேடும் பொறுப்பினை ஏற்றுத் திரவேண்டிய நிலையிலே லெடிசா. மிகச் சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி இருக்கவேண்டும் — நெப்போலியனுடன் சேர்ந்து எட்டுக் குழந்தைகள் லெடிசாவுக்கு.

## அறிஞர் அண்ணு

குடும்பத்துக்குத் [illegible] பெயராக போனபார்ட் என்பது அமைந்திருந்தது அந்தப்பெயரின்படி பார்த்தால், இத்தாலிய மேட்டுக் குடியினர் இக்குடும்பத்தினர் என்று தெரிகிறது.

நெப்போலியனுக்கு, வெற்றி மேல் வெற்றி கிட்டிய நாட்களில், இந்த உணர்ச்சி மேலோங்கியும் காணப்பட்டது. 'பிரபு வம்சம்' என்று கூறிக் கொள்வதிலே ஒரு சுவை இருக்கத்தான் செய்தது. ஆனுல், புகழ்பாடி மயக்க விரும்பிய சிலர், குடும்பத்தின் பூர்வீக பெருமைகள் பற்றி அதிகம் கதைத்தபோது, நெப்போலியன் விரும்பவில்லை. பொய்யுரை கேட்டு ஏமாறுபவன் அல்ல என்பதால் மட்டுமல்ல, இந்தக் குடும்பத்துக்கு, வேறு எந்தக் குடும்பத்துக்கும் ஏற்பட இயலாத பெரும் புகழ் ஈட்டியிருக்கும்போது, பழைய நாட்களிலே என்னென்ன பெருமைகள் இருந்தன என்று கண்டறிந்து கூறத்தான் வேண்டுமா? வைரம் ஒளிவிட்டு, அதன் மதிப்பைத் தானே எடுத்துக்காட்டும்போது, அது எத்தகைய ஆழமான சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதைக் கூறியா, புதிய மதிப்புத் தேட வேண்டும்! நெப்போலியன் இவ்விதம் எண்ணமலிருந்திருக்க முடியாது.

(வளரும்)

---

# ஆபாச தினசரிகளுக்கு எதிராக இயக்கம் தொடங்க முயற்சி!

ஆபாசச் செய்திகளை வெளியிட்டு தமிழ் இளைஞர்களையும குமரிகளையும் நாசமாக்கிவரும் தமிழ்த் தினசரிகளுக்கு எதிராக பலமான எதிர்ப்பியக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பும் முயற்சியில் புங்குடுதீவைச் சேர்ந்த தமிழன்பரான திரு. நாக. பத்மநாதன் அவர்கள் ஈடுபட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் சுதந்திரன் ஆசிரியருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டுத் தீங்குகள் பல இழைக்கப்படும் வகையில் ஈழத் தமிழின மக்களாகிய நாங்கள் இன்று பல பாரபட்சங்களுக்கும் இன ஒழிப்பு முறைகளுக்கும் உள்ளாகிக் கொண்டிருப்பது தெரிந்ததே.

இந்த வகையிலே தமிழின மக்களின் சிந்தனையை வெகுதூரம் கட்டுப்படுத்தி, அரசியற் செய்திகளை நஞ்சு பாய்ச்சும் விதத்தில் திரித்து வெளியிட்டு, அத்துடன் தமிழினத்தின் கவசமாய் இதுகாலவரை இருந்த ஒழுக்கத்தை உடைத்து மாணவ மாணவிகள் முதற்கொண்டு எம் சமுதாயத்தை கொலை கற்பழிப்பு காமம் ஆகிய இழிந்த உணர்விலேயே ஈடுபடுத்தும் வகையில் குப்பை கூளச் செய்திகளை வேண்டுமென விளக்கி விரித்து எழுதி இவற்றின் உருவாய் இன்று பல பத்திரிகைகள் (தினசரிகள்) தமிழ் மக்களிடையே உலவி வர விடப்பட்டுள்ளமை எவர்க்கும் விளங்கத்தக்கதே.

தந்தி, மித்திரன், தினகரன், தினபதி ஆகிய பத்திரிகைகள் இத்துறையிலே எம் இனத்துக்குச் செய்துவரும் தீங்கை எவரும் பார்த்துக் கொண்டு மௌனமாய் இருத்தல் துரோகத்துக்கு துணை போவதாகவே இருக்கும்.

தமிழினத்துக்கு [illegible] றுள்ள சாபக்கேடுகள் போதாதா? எனவே, எம் இனத்தை மேலும் சீரழித்துக் கெடுக்கவென விடப்பட்டுள்ள இப்பத்திரிகைகளின் முகமூடியைக் கிழித்து இவற்றை புறமுதுகிடவைக்க வேண்டியது கடனுகின்றது. இது பொதுமக்களின் கையிற் தான் தங்கியுள்ளது.

இவை போன்ற பத்திரிகைகள் இக்காலத்தில் எங்கும் உள்ளவைதான் எனக் கூறும் ஏனுதானுேப் பேர்வழிகளும் இவை விற்பனைக்காயிருக்கலாம் என விளங்கிக் கொள்ள விரும்பும் வீணர்களும் இப்பத்திரிகைகளை எதிர்க்கப்பயப்படும் அரசியல்வாதிகளும்புத்தக விமர்சகர்களும் தாராளமாய் இதில் ஒதுங்கி நின்று கொள்ளலாம்!

துடிப்புள்ள இளைஞர்களையும் நெஞ்சுரங் கொண்ட தொண்டர்களையும் நல்லாசிரியர்களையும் சான்றோரையும் இனத்தின் நலம்பேணி நிற்கும் அத்தனை உள்ளங்களையும் மேற்குறித்த விடயம் [illegible] லாம் என்பதைத் தயை கூர்ந்து தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி, தீவிர பிரச்சாரம் செய்து, எரிக்கும் இடத்திலே இப்பத்திரிகைகளை எரித்துக் கொழுத்தி அத்துடன் முறையான 'பத்திரிகை வாசகர் சங்கம்' ஒன்றையும் நிறுவி மக்களின் விழிகளாய் பத்திரிகைகளை இயங்க வைப்பதே நோக்கம். இவைபற்றி மேலும் சிந்தித்து தங்கள் கருத்தையும் தருமாறு வேண்டுகிறேன்.

இத்தமிழன்பரின்முகவரி:- நாக. பத்மநாதன், மீனும்பிகை வாசம், 2ம் வட்டாரம், புங்குடுதீவு என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஓர் உண்மை

அரியணை உரை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய போது, பிரதமர் கூறிய ஒரு விஷயத்தை வைத்துக் கொண்டு தமிழரசுக்கட்சி மீது கல்லெறியவும் களங்கம் கற்பிக்கவும் ஒரு சிலர் அற்பத்தனமாக முயன்று வருகின்றனர்.

மாவட்டசபைப் பிரச்சினை மீது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்த பிரதமரைத் தமிழரசுக் கட்சிதான் அப்படிச் செய்யவடாது தடுத்து நிறுத்தி வைத்திருந்ததாகவும் கிடைத்த பாராளுமன்றப் பிரதிநிதிப் பதவிகளை விட்டுவிட மனமின்றியே இப்படி அவர்கள் செய்ததாகவும், தமிழ் மக்களினால் அரசியலில் செல்லாக் காசாக்கப்பட்டு விட்ட சில வாலறுந்த நரிகள் ஊளையிட ஆரம்பித்துள்ளன. இந்த நரிகளின் கூக்குரலுக்குத் தமிழரசுக் கட்சியை ஒழித்துக் கட்டுவதையே தன் மூல நோக்கமாகக் கொண்டுள்ள தமிழ் தினசரி ஒன்று களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

இந்த ஊளைகளும் ஒப்பாரிகளும் தமிழ்பேசும் மக்களின் செவிகளில் ஏறப்போவதில்லை என்பது நமக்கு நன்ருகத் தெரியும். ஏனெனில் தமிழரசுக்கட்சி எதைச் செய்தாலும் — தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் எந்த முடிவை எடுத்தாலும் — அது தமிழ் பேசும் மக்களின் நன்மையை — நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் தமிழ் பேசும் மக்கள் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கிருர்கள்.

இந்த நம்பிக்கையை— இந்த விசுவாசத்தை உடைத்து விடக் கூடிய சக்தி எவருக்குமே கிடையாது. தமிழினத்தவரிடம் இந்த நம்பிக்கையும் விசுவாசமும் உறுதிப்பாடும் இருக்கும் மட்டும் அவர்களது சுதந்திரக் குரலை— உரிமைப் போராட்டத்தை யாரும் பெலவீனப் படுத்தி விடவும் முடியாது.

பாராளுமன்றத்தில் பிரதமர் கூறியிருப்பதென்ன?

"நான் உங்களுடன் செய்த உடன்பாட்டை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், பதவியை விட்டுப் போகத் தயாராக இருக்கிறேன்" என்று தமிழரசுக்கட்சியினரிடம் கூறிய போது அவர்கள், "அது எவ்விதத்திலும் எமக்கு உதவுவதாக ஆகாது. நீங்கள் வெளியேருமல் இருப்பதற்கு நாம் உடன்படுகிறேம்" என்றுகூறினர்."

—பிரதமர் கூறியிருப்பதைத்தான் வரிக்கு வரிமேலே தந்திருக்கிறேம். தமிழரசுக் கட்சியினர் பிரதமரிடம் அன்று அப்படித் தெரிவித்திருந்தது அப்படியே உண்மையானல் கூட அதில் தவறு என்ன இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேம்.

1965ம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக் கட்சி யூ. என். பி.க்கு ஆதரவு அளித்தபோது கட்சியுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் மாவட்டசபையும் ஒன்றே தவிர, மாவட்ட சபை நிறுவுவது மட்டுமே நிபந்தனையாக இருக்கவில்லை.

மாவட்டசபை நிறுவப்படா விட்டால் பதவியை விட்டு வெளியேற வேண்டும் என்று தமிழரசுக் கட்சி பிரதமரிடம் எவ்வித கட்டுப்பாடும் எப்போதும்விதித்ததில்லை. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற விட்டால் பதவியை விட்டுப் போய்விடுவேன் என்று பிரதமர்தான் தாமாகவே கல்முனை மாநாட்டிலும் மற்றும் பல பொது நிகழ்ச்சிகளிலும் கூறியிருக்கிருர்.

மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவர முடியாத சூழ்நிலை நாட்டில் செயற்கையாக உருவாக்கப்பட்டு இறுதியில் இத்திட்டத்தைக் கைவிட வேண்டிய நிலைக்குப் பிரதமர் தள்ளப்பட்டபோது — தமிழரசுக்கட்சி ஆத்திரப்படாமல் அவரது நிலையை அனுதாபத்துடன்தான் நோக்கியது. அதே சமயம் மாவட்டசபை கைவிடப்பட்டாலும் தமிழரசுக்கட்சியுடன் பொருந்திக் கொண்டபடி தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் மொழிச் சட்ட அமுல், தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினை போன்றவற்றில் அளித்த வாக்குறுதிகளையாவது பிரதமர் நிறைவேற்றுவார் என்று தமிழரசுக்கட்சியினர் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர்.

கனவான் என்று கருதப்பட்ட ஒருவரிடம் தமிழரசுக் கட்சி இப்படி நம்பக்கை வைத்திருந்ததில் கட்சிமீது எவரும் குறைகூற முடியாது.

மாவட்ட சபை மசோதா கைவிடப்பட்டாலும் சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் நிறுவப்பட்ட இந்த அரசாங்கம் நிலைத்திருந்தால்தான் தமிழ் மக்களின் ஏனைய கோரிக்கைகளையாவது வென்றெடுக்கமுடியும் என்று கட்சித் தலைவர்கள் நம்பியிருந்தனர். இறுதியில் உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்றதுபோல தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் கூறப்பட்ட அம்சங்கள் எதையுமே நிறைவேற்ருது தமிழ் பேசும் மக்களை பிரதமர் ஏமாற்றுகிருர் என்ற உண்மை வெட்ட வெளிச்சமானதும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறிவிட்டது. இன்று ஆட்சியாளரை முழுமூச்சுடன் எதிர்த்தும் வருகிறது.

மாவட்டசபை பிரச்சினை மீது பாராளுமன்றம் கலைக்கப் பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் கூட என்ன நடந்திருக்கும்? வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி வெற்றிக் கொடி நாட்டி அத்தனை தொகுதிகளையும் கைப்பற்றியிருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை.

ஆனல் அதே சமயம், தென்னிலங்கையில் என்ன நடைபெற்றிருக்கும்? "சிங்கள மக்களே! நீங்கள் எமக்குப்

# "ஒப்சேவர்" ஏடு கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடுமா? உண்மை மறைந்துவிடுமா?

பூனை தன் கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விடும் என்று நினைத்த கதை நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும். கடந்த வார (ஜூலை 28) 'சிலோன் ஒப்சேவர்' ஏட்டில் டென்சில் பீரீஸ் என்பவர் தமிழரசுக் கட்சியைப் பற்றி எழுதியுள்ள கருத்துக்களைப் படிக்கும்போது நமக்கு அந்தப் பூனையின் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது!

'தொற்றுநோய்க் கிருமி செத்துக் கொண்டிருக்கிறது' என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள அக்கட்டுரையில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே யுள்ள பாசப்பிணைப்பையும் பற்றினையும் புரிந்து கொள்ளாமலோ அல்லது வேண்டுமென்று அதை மறைத்தோ கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு ஏதோவெல்லாம் பிதற்றியிருக்கிருர்.

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கூட்டரசாங்கத்தை வீழ்த்துவதற்குத் தமிழரசுக் கட்சி உதவி செய்த போதும், 1965 மார்ச் மாதம் தேசிய அரசாங்கம் அமைப்பதற்குக் யூ. என். பி. க்கு கை கொடுத்த போதும் தமிழரசுக் கட்சித் தலைவர்களை 'ஒப்சேவர்' ஏடு புகழ்ந்தேத்தியதை நாம் இன்னும் மறந்துவிடவில்லை.

இன்று அரசாங்கத்தைத் தமிழரசுக்கட்சி எதிர்ப்பதென்று முடிவெடுத்தபின்பு கட்சிமீது வகுப்புவாதக் குற்றத்தைச் சுமத்துபவர்கள் அன்று இதே வகுப்புவாதக் கட்சியுடன்தான் தோழமை கொண்டாடினர்கள் என்பதைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள்.

தமக்கு சார்பாக இருந்த போது இனித்த பொருள் பாதகமாக மாறும்போதுகசப்பது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. 'ஒப்சேவர்' ஏட்டு எழுத்தாளரின் சந்தர்ப்பவாதத்தை இது நன்கு எடுத்துக்காட்டுகிறது.

அரியணை உரை விவாதம் —தமிழரசுக் கட்சி தொடர்ந்து தமிழ் மக்களின் குரலை அதிகார பூர்வமாக எதிரொலிக்க முடியாதென்பதை எடுத்துக்காட்டுகிறது என்று கூறியிருக்கிருர் டென்சில்பீரிஸ். இதற்கு அவர் கூறும் காரணம் பாராளுமன்றத்தில் இருக்கும் ஏனைய தமிழ், முஸ்லிம். உறுப்பினர்கள் ஒற்றையாட்சியில்தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் உண்டு என்பதை உணர்ந்திருக்கிருர்ஙள் என்பதுதான்.

திரு. டென்சில்பீரிசுக்கு கசப்பாக இருந்தாலும் 1956ம் ஆண்டுக்குப் பின்னர்—கடந்த 13 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சிதான் தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப்பெற்று தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது என்பது மாற்றவோ, மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

தமிழரசுக் கட்சிதான் தமிழ் மக்களின் ஒரே கட்சி என்ற காரணத்தினுல் தான் 1965ம் ஆண்டு பிரதமர் டட்லி சேனநாயகா தமிழரசுக் கட்சியுடன் தமிழினத்தின் பிரச்சினைகள் குறித்து ஒப்பந்தம் செய்தார்.

யூ. என்.பியின் கையாட்களான தமிழ் காங்கிரஸ் எம். பீக்களும் அடிக்கடி கட்சி விட்டு கட்சி மாறும் ஒரு சில முஸ்லிம் எம். பீக்களும் தமிழரசுக்கட்சியை தாக்கிப் பேசி விட்டார்கள் என்பதனால் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்காக பேசும் குரலை இழந்துவிடும் என்று

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

ஒப்சேவர் எழுத்தாளர் கற்பனை செய்வாரானல் அவரைப் போன்ற அடிமுட்டாள் வேறுயாரும் இருக்க முடியாது.

திரு. டென்சில் பீரிஸ், புள்ளி விபரங்களை விழுங்க முடியாது. 1965 பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 14 தொகுதிகளைக் கைப்பற்றியிருக்கிறது தமிழரசுக் கட்சி. அந்த14எம். பீக்களில்இருவர் சுயநலம் காரணமாக இன்று குத்துக்கரண மடித்திருக்கலாம். ஆனல் வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ளபெரும்பாலான மக்கள் சமஷ்டி அரசியற் திட்டத்தையே கோருகிருர்கள் என்ற புள்ளி விபர உண்மையை மூடி மறைக்க முற்படுவது அறிவீனமே தவிர வேறு எதுவுமல்ல.

ஆனல் இதிலிருந்து தமிழ் பேசும் மக்கள் ஒரு உண்மையை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். 14 பேரை ஒரே கட்சியில் பாராளுமன்றம் அனுப்பினுலும், கூடவே ஒரு சில துரோகிகளை அனுப்பிவைப்பதனுல் தமிழினத்தின் கோரிக்கையை நசுக்குவதற்கு சிங்கள அரசாங்கம் இத்துரோகிகளைப் பயன் படுத்தி வருகிறது. ஒரு குடபாலைக் கெடுக்க ஒரு துளிவிஷம் எப்படிப் போதுமோ அதுபோல பெரும்பான்மைத் தமிழ்க் கட்சியான தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகளை முறியடிக்க ஏனைய தமிழ்த் துரோகிகளை ஆட்சியாளரும் அவர்களின் அடிவருடிகளும் பயன் படுத்த முனைகின்றனர். எனவே இச்சதியை முறியடிக்க தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்குமாகாணங்களின் சகல தொகுதிகளிலுமிருந்தும் ஒரேகட்சி பிரதிநிதிகளையே தெரிந்

(9ம் பக்கம் பார்க்க)

போதிய பெரும்பான்மைப்பலம் தராத காரணத்தினுல் அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் உதவியை நாடவேண்டிருக்கிறது; அதனுல் அவர்கள் கேட்டபடி மா. சபை உட்பட பல கோரிக்கைகளை வழங்க வேண்டியிருக்கிறது. எனவே தமிழர்களின் ஆதரவின்றி தனிச் சிங்கள அரசாங்கம் அமைக்க எமக்கு பரிபூரண பெரும்பான்மை தாருங்கள்" என்று யூ. என். பி. சிங்கள மக்களிடம் பிரசாரம் செய்து தனிப் பெரும்பான்மைக் கட்சியாக ஆட்சிக்கு வந்திருக்கும். இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் அது தமிழினத்துக்கு எவ்வளவு பெரிய கெடுதியாக முடியும் என்பதற்கு யூ. என். பி. ஆட்சியின் கீழ் முன்பு தமிழ் பேசும் மக்கள் அனுபவித்த கொடுமைகள் சாட்சியம் பகர்கின்றன.

எனவே தமிழரசுக் கட்சி எந்த முடிவை எடுத்தாலும் ஆழமாகச் சிந்தித்து அமைதியாக தீர்மானிக்கும். அம்முடிவு தமிழினத்தின் எதிர்கால நன்மையை உத்தேசித்ததாகவே அமையும் என்பதை தமிழ் பேசும் மக்களுக்கு அழுத்தமாக கூறிவைக்க விரும்புகிறேம்.

———

## நாவலர், கலைஞர் வாழ்க!

தமிழ் நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தின்பொதுச் செயலாளராக நாவலர். இரா. நெடுஞ்செழியனும் தலைவராக முதலமைச்சர் கலைஞர் மு. கருணநிதியும் ஏகமனதாகக் கழகப் பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கழகத்தின் இருமுக்கிய பொறுப்புக்களையும் ஏற்றுள்ள நாவலருக்கும் கலைஞருக்கும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பாக நமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

கழகப் பொதுச் செயலாளர் தெரிவு குறித்து நாவலருக்கும் கலைஞருக்குமிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு தமிழ் மக்களின் உள்ளங்களையெல்லாம் கலங்கிக் கொண்டிருந்ததென்பதில் ஐயமில்லை. அந்தக் கருத்து வேறுபாடுகள் களைந்தெறியப்பட்டு கழகப் பணியாளர்கள் தெரிவு போட்டி பூசல் பிளவு என்ற வார்த்தைகளுக்கிடமின்றி ஏகமனதாக நடைபெற்றதறிந்து மகிழாத தமிழுள்ளங்கள் தமிழ் கூறும் நல்லுலகத்தில் இருக்கமுடியாது. நாவலருக்தும் கலைஞருக்குமிடையே சமரசம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த அத்தனைபேரையும் பாராட்டுகிறேம்.

நாவலர்—கலைஞர் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் இன்று புதுமெருகு பெற்று தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து பணியாற்றி அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்து இருவருக்கும் நமது வாழ்த்துக்களை மீண்டும் சமர்ப்பிக்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளுக்காக தமிழினம் தன்மானத்தை இழக்காது!

## ஒற்றையாட்சியை ஒழித்துக்கட்டும்வரை தமிழரசுக் கட்சிக்கு ஓய்வு ஒழிச்சலில்லை!

## பாராளுமன்றத்தில் இரத்தினம் சூளுரை!

இந்த அரியணை உரை மீது பேசிய அரசாங்கக் கட்சி உறுப்பினர்களும் எதிர்க் கட்சி உறுப்பினர்களும், அடுத்தமுறை ஆட்சிக்கு வருபவர்கள் யார் என்ற போட்டியை மையமாக வைத்துக் கொண்டே ஒருவரையொருவர் குற்றம்சாட்டிப் பேசினர். தமிழினத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் இந்த நாட்டை ஆள்வது யாரென்ற பிரச்சினை எங்களுக்கு இல்லை. எங்களிடமிருந்து பறித்த உரிமைகளை-நாங்கள் இழந்த உரிமைகளை-எப்படித் தரப்போகின்றார்கள்; ''தருகிறோம், தருகிறோம்'' என்று ஏமாற்றிக் கொண்டு வருகிறார்களே, எப்படி நாம் இழந்த உரிமைகளைப் பெறுவது; நாம் உரிமைகளை இழந்திருக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு-அதனை ஏற்றுக்கொண்டும் மீண்டும் மீண்டும் மறைக்க முயல்கின்றவர்களுக்கு— உண்மையை, நீதியை, நியாயத்தை எப்படி எடுத்துக்காட்டுவது என்பனவே எங்கள் பிரச்சினைகள் உண்மையைப் பல முறை மறைத்துப் பேசினாலும் உண்மை, உண்மையாகத்தானிருக்கும்.

### சோல்பரித் திட்டம்

இந்த நாட்டிலே இருக்கின்ற இருபெரும் இனங்களில் ஓரினமாகிய தமிழினத்தின் உரிமைகள் இன்னும் கொடுக்கப்படவில்லை.

சோல்பரி அரசியல் திட்டம் வந்த காலந்தொடக்கம் தமிழ் மக்கள் இரண்டாந்தரப பிரசைகளாக ஆக்கப்பட்டார்கள். அவர்களின் மொழி உரிமை பறிக்கப்பட்டது; அவர்கள் ஆட்சி உரிமையின்றித் தவிக்கின்றார்கள். அவர்களின் நில உரிமையையும் பறிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதை அறிவறிந்த மக்கள் பண்புள்ள மக்கள் — உண்மையை, நடுநிலையைப் பேணும் மக்கள் எவரும் ஏற்றுக்கொள்வார்கள் என எண்ணுகின்றேன்.

### எப்படி பதவிக்கு வந்தார்கள்

இந்த நாட்டிலே இரு பெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்னலடைகின்ற போது—அதிகாரத்துக்குவர முயலும்போது — எங்களைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வரத் தாமாகவே எங்களை அழைக்கின்றன. இதனை மறந்துவிடக்கூடாது. எனக்கு முன்னர் பேசிய அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் இதனை மறந்துவிட்டார்கள். இன்று அவர்கள் ஆட்சியிலிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நாங்கள் செய்த உதவிதான். ஐக்கிய தேசியக கட்சியுடன் நாங்கள் ஒத்துழைக்காது விட்டிருந்தால் இன்று எங்களைக் குறைகூறுகின்ற மட்டக்களப்பு இரண்டாவதுஉறுப்பினரோ (ஜனாப் லத்தீப் சின்னலெப்பை) கற்குடா உறுப்பினரோ (திரு. தேவநாயகம்), அரசாங்கக் கட்சி மேசையிலிருந்து விழும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்க முடியாதிருந்திருக்கும், அவர்கள் நன்றி மறந்தவர்களாகிவிட்டார்கள்.

### பிரதமர் சொன்னார்

அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டங்களில் நடந்தவற்றை எல்லாம் நான் இங்கு சொல்லவிரும்பவில்லை. எனினும் இதனைச் சொல்லிவைக்க வேண்டும். 1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆந்தேதி, மாவட்ட சபைகள் பற்றிய வெள்ளையறிக்கை இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட முன்னர் நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பிரதமர் அவர்கள் ஓர் உண்மையைச் சொன்னார்கள். யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் முன்னிலையிலே, வவுனியாப் பிரதிநிதி திரு. ரீ. சிவசிதம்பரம் முன்னிலையிலே ஏன், இப்பொழுது எங்களுக்குக் கல்லெறிய முற்படும் பிரதிநிதிகள் முன்னிலையிலே ''இன்று நான் ஆட்சியிலிருப்பது தமிழரசுக் கட்சி செய்த உதவியினால் தான்'' என்று சொன்னார்கள்.

### மரியாதை இழக்க மாட்டோம்

இன்று அரசாங்கத்திலே ஒட்டிக்கொண்டிருக்கின்ற சில சிறுபான்மை இன உறுப்பினரைப் போல நாங்களும் பெருந்தன்மையிழந்து — சுயமரியாதையிழந்து சில சலுகைகளுக்காக ஒட்டிக் கொண்டிருப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்பார்க்க முடியாதென்பதை திட்டவட்டமாக வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

சலுகைகளைப் பெறுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். காட்டிக் கொடுப்பவர்கள் ஓரினத்தில் இருக்கத்தான் செய்வார்கள். அரசியல் வரலாற்றிலே நாடுகளின் வரலாற்றிலே—இதனைக் காண்கிறோம்; எப்பொழுதும் சலுகைகளுக்காக உரிமையை விற்பவர்களுக்கும் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டுபவர்களும் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### மூலகாரணம்

ஏன் தமிழினத்தின் உரிமை கொடுக்கப்படவில்லை, ஏன் இந்த நாட்டிலே இன ஒற்றுமைநிலை நாட்டப்படவில்லை என்பதற்கு இங்கு பலர் பல காரணங்களைச் சொன்னார்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் இந்த சோல்பரி ஆட்சி அமைப்பே —இந்த ஒற்றை ஆட்சி அமைப்பே அடிப்படைக் காரணமாகும். இந்த ஒற்றையாட்சி முறை இந்த நாட்டுக்கு உதவாது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியது.

எதிர்க்கட்சி அங்கத்தவர்கள், ஓர் அரசியல் அமைப்புச் சபை நிறுவப்பட வேண்டுமென ஒரு பிரேரணையைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அரசாங்கக் கட்சியினரும் இந்த நாட்டுக்கு நல்லதோர் அரசியல் சட்டத்தை ஆக்க வேண்டுமென்று முயல்கிறார்கள். இவையெல்லாம் பேச்சளவில் இருக்கின்றனவேயன்றிச் செயற்படவில்லை.

> அரியணை உரை மீது பாராளுமன்றத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. ஆற்றிய உரை இது.

இந்த சோல்பரிச் சட்டம் இந்த நாட்டுக்கு உதவாது என்பதை எதிர்க் கட்சியினரும் ஆளும் கட்சியினரும் மாறி மாறிப் பதவியிலிருந்த காலத்தில் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். எனவேதான் ஐக்கிய தேசியக கட்சி பலமில்லாத கட்சி என்று நாங்கள் சொல்லுகிறோம்; அது எங்களுடைய ஆதரவோடு ஆட்சிக்கு வந்தது; ஐந்து கட்சிகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்தது. அதுபோலவே சுதந்திரக் கட்சியும் பலமில்லாத கட்சி. தன் காலிலே நிற்கமுடியாது இடதுசாரிக் கட்சி அங்கத்தவர்களின் உதவியை அது பெற்றிருக்கிறது. தாங்கள் ஆட்சிக்குவரவேண்டுமென்றால் எங்களை 'வாருங்கள், வாருங்கள்'' என்று நேசக்கரம் நீட்டும் இவர்கள் இந்த நாட்டிலே, தனித்து நின்று, உறுதியாக நின்று— இப்பொழுது இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் செய்ததைப்போல சரியென்று தோன்றியதை எப்படித் துணிவுடன் செய்வார்கள் என்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன்.

### சிங்கள இனத்தில் இல்லை

மனம் இருக்கலாம். உண்மை தெரியலாம்; நீதி தெரியலாம். ஆனால், தாம் நிமிர்ந்து நிற்க முடியாது என்கின்ற அச்சம்தான், எங்களுக்கு எப்பொழுதும் 'தருகிறோம், தருகிறோம்'' என்று கூறுகின்ற வாக்குகளை நிறைவேற்றவிடாமல் அவர்களைத் தடுக்கிறது. அதை நாங்களும் விளங்குகிறோம், முதலில் அவர்கள் தங்களுக்கிடையே ஒற்றுமையைப் பேண வேண்டும். இந்த நாட்டுக்கு நல்லது — இதுதான் இந்த நாட்டிலே வாழுகின்ற சகல இனத்தவர்களுக்கும் நல்லது என்பதைச் சொல்லிச் செய்து காட்டத்தக்க ஒருவராவது இன்று சிங்கள இனத்திலுள்ள அரசியல்வாதிகளிலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### வகுப்புவெறி

தேர்தல் நெருங்கும்போதெல்லாம் வகுப்பு வாதத்தைத்தான் அவர்கள் கக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியென்றாலென்ன எதிர்க் கட்சியென்றாலென்ன அவர்களிடமிருந்து வகுப்பு வாதக் கூச்சல்களைத் தான் நாங் கட்கிறோம். இந்த நாட்டிலே நடப்பது என்ன? அனுராதபுரத்திலே நடந்தது என்ன? ஒரு படமாளிகையிலே ஒரு படத்தைக் காட்டவிடாமல் இரண்டு மாதங்களாக தீவிரவாதிகள் தடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே அரசாங்கம் செயலற்றிருந்தது. ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலே. ('டெய்லி நியூஸ்' பத்திரிகையிலே) இந்தச்செய்தி வந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதுவரை இந்தச் செய்தி மறுக்கப்படவில்லை;

இரண்டு மாதங்களுக்கு ஒரு படமாளிகை மூடப்பட்டிருந்தால் இந்த நாட்டிலே அரசாங்கம் இருந்ததா என்று தான் நான் கேட்கின்றேன். நாங்கள் நீதியையும் சட்டத்தையும் நிலைநாட்டித் தீவிரவாதிகளுடைய வெறுப்பைத் தேடிக்கொள்ளக் கூடாதென்ற அரசாங்கத்தின் பலவீனத்தையும் சோர்வு மனப்பான்மையையும் தான் இது காட்டுகிறது.

### சோல்பரி சொன்னார்

- சிறுபான்மை இனத்தின் உரிமைகளை மறுக்கின்ற வகையிலே, சோல்பரி அரசியல் சட்டம் இருப்பதனாலே தான் இன்று இந்த நாட்டிலே ''சிறுபான்மையினர்களுடைய உரிமைகளைத் தருகிறோம் தருகிறோம்'' என்று ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். இந்த அரசியல் சட்டத்தை ஆக்கித் தந்த சோல்பரி பிரபு அவர்களும், ''இவ்வாறு தமிழினம் நசுக்கப்படுமென்று எண்ணி இருந்தால் நான் பல மாற்றங்களைச் செய்திருப்பேனென்று 20 ஆண்டுகளுக்குப் பின்னர் சொல்லியிருக்கிறார்.

இந்தச் சட்டத்தை - இலங்கையிலேயுள்ள சட்டத்தை- தான் அநுபவக்குறைவினாலே ஏனைய நாடுகளின் சட்டங்களை அமைத்ததற்கு முன் அமைத்ததினாலேதான் இந்தக் குறை வந்தது என்று சேர். ஐவர். ஜென்னிங்ஸ் அவர்களும் கூறியுளார். அன்றியும் பீ. பீ. ஸீ. யிலே அவர் பேசிய உரையிலே, இன்னும் விளக்கமாக அக்கருத்தைத் தெரிவித்திருக்கிறார். நான்கு வகையான வழிகளை-நான்கு வகையான காப்புக்களைச் சிறுபான்மையினத்துக்கு வகுத்துக் கொடுக்க வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார். அவற்றிலே முதலாவது தான் (Federalism) சமஷ்டி அல்லது இணைப்பு ஆட்சி. இரண்டாவதாகப் பிரதேச உரிமை.(Regional Devolution) மூன்றாவது பாதுகாப்பு வாசகங்கள். (Protective clauses) நான்காவதாக ''Bill of Rights''— அதாவது அடிப்படை உரிமைகள். இவ்வாறாக நான்குவகைக் காப்புக்களும் அரசியற் சட்டத்தில் இருந்தால்தான் சிறுபான்மையினருள்ள நாட்டுக்கு அச்சட்டம் மிகப் பொருத்தமானது என்று அவர் கூறியிருக்கிறார்.



இந்த நாட்டிலே மட்டுமன்று, ஆபிரிக்காவிலே, இந்தியாவிலே, மலேசியாவிலே, பாக்கிஸ்தானிலே உள்ளசிறுபான்மை மக்களின் நன்மைக்காக சட்டங்களை ஆக்கிய பெருமக்கள்— அரசியல் நிபுணர்கள் சொல்லுகின்ற கருத்தைத்தான் நாமும் சொல்லுகிறோம்.

### கனடா உதாரணம்

எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி கலாநிதி என். எம். பெரேரா 1966 ஆம் ஆண்டிலே கனடாவுக்குப் போய் விட்டு வந்து 'கனடாவிலே இணைப்பு ஆட்சி இருக்கிறது; என்றாலும் அங்கே மொழிப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று சொன்னார்.

இன்று 100 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத மொழிப் பிரச்சினை கனடாவிலே தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலம், பிரெஞ்சு ஆகியமொழிகளுக்கு அங்கே உரிய உரிமைகள் வழங்குவதற்காக அண்மையிலே சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எனவே எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி அவர்கள் கூறுவதுபோல ஓர் இணைப்பு ஆட்சியிலே மொழியுரிமை கிடையாதென்பதை இப்பொழுது கனடா,இல்லை மொழியுரிமை கிடைக்க முடியும்' என்று செயல் முறையிலே செய்து காட்டியிருக்கின்றது.

### ஏன் இந்த நிலை?

ஒற்றையாட்சித் திட்டத்திற்குப் பதிலாக இந்த நாட்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# தமிழினத்தின் சுதந்திர

# இருக்கும்வரை சோர்வி

## பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சித் தலை

அரியணை உரை விவாதத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் இறுதியாகப் பேசிய திரு. சி. மூ. இராச மாணிக்கம் அவர்களின் பேச்சு இங்கு முழுமையாக இடம் பெறுகிறது.

நான் இந்த நேரத்தில் பொறுப்டணர்ச்சியுடன் எனது கட்சியின் சார்பில் பேசவேண்டிய ஓர் சூழ்நிலையில் எழுந்து நிற்கிறேன். அரசாங்கக் கட்சி மட்டுமல்லாது மற்றெல்லா கட்சிகளின் தாக்குதலுக்கும் உள்ளாகியிருக்கிறோம். இந்த அரசாங்கத்தின் இறுதியான சிம்மாசனப்பிரசங்கம் ஆகையால் இது எல்லோரினதும் கவனத்தையும் அக்கறையையும் ஈர்த்திருக்கிறது. எல்லா விமர்சனத்திற்கும் எல்லோரின் தாக்குதலுக்கும் நாம் ஆளாக்கப்பட்டோம். ஓர் கேள்விக்குறி பல தரப்பட்ட உணர்ச்சிகளுக்கிடையிலும் போராட்டம் உண்டாகியிருக்கிறது. இனத்தாலும் மதத்தாலும் பிரிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சாகியத்தாரும் தனித்தனியே தங்கள் தங்களுக்கென இயற்கையாக அமைந்துள்ள உணர்ச்சிகளையும் அபிலாஷைகளையும் கொண்டவர்களாய் இருக்கின்றனர்.

இந்த நாட்டில் ஒற்றை ஆட்சி முறையின் கீழ் ஜனநாயகம் என்பது உண்மையாக நடைமுறைக்கு ஒப்பாததாக இருக்கிறது. ஏனெனில் பெரும்பான்மை இன

காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் 1956 ம் ஆண்டில் எங்கள் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது அவர் இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சி முறையே ஒரே வழியென்பதை ஏற்றுக்கொண்டார். எனினும் பொதுசன அபிப்பிராயத்துக்குப் பயந்து. ஓர் அரை குறைத்தீர்வினை ஏற்படுத்த உடன்பட்டார். இதனல் அவர் எங்களுடன்

ஆட்சிக்குவந்தபின் என்ன நடந்தது? எங்களுடன் பல தடவைகளில் பேச்சுவார்த்தை நடத்தினர். அவர் செய்யவேண்டுமென முதல் நினைத்த காரியம் மாவட்ட சபைகள் நிறுவுவதாகவேயிருந்தது. மாவட்டசபைகளை நிறுவுவதற்கு வேண்டிய நகல் மசோதாவைத் தயாரிக்க அவர் ஒரு குழுவையும் நியமித்தார். ஆனல் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியால் அவர் மாவட்ட சபை நிறுவும் தனது முயற்சியைக் கைவிடவேண்டி ஏற்பட்டது.

1965ம் ஆண்டு நாம் பிரதமர் திரு. டட்லி சேனநாய

## ஈழத் தமிழர்கள் எல்லோரும் ஓரினம்!

## கல்குடா எம். பி. இதை உணரட்டும்!!

யாக நாங்கள் அமைந்திருக்கிறோம். இந்நாட்டின் அரசியலில் நாங்கள் ஓர் பிரதான சக்தியாக விளங்குகிறோம் என்பதையிட்டு பெருமைப் படுகிறேன்.

### எமது நோக்கம்

தமிழரசுக் கட்சி இருபது வருடகாலங்களாக இயங்கி வருகிறது. எங்கள் கொள்கை, எங்கள் நோக்கம், எங்கள் இலட்சியம், எங்கள் திட்டம் எங்கள் விஞ்ஞான ரீதியான சித்தாந்தம் எல்லாமே இந்த நாட்டில் ஓர் சமஷ்டி அரசியல் திட்டத்தை உண்டாக்குவதே. ஏன் அதைச் சொல்கிறோம்?

நாங்கள் ஓர் ஜனநாயக அரசின்கீழ் இருப்பதாகக்கருதப்படுகிறது. ஜனநாயகம் என்பது சொல்லளவில் சரியானதேயன்றி அநுபவரீதியில் மாற்றமடைந்து விடுகிறது. பெரும்பான்மையின் ஆட்சிதான் ஜனநாயகம் என்றகிறது; ஒரே இன ஒரே மத மக்கள் வாழும் நாட்டில் பெரும்பான்மை ஆட்சி நடைபெறலாம். அவ்வித நாட்டில் தான் உண்மை ஜனநாயகம் நிலவக்கூடும்.

எங்கள் நாட்டில் மொழியினல், இனத்தால், மதத்தால் பிரிக்கப்பட்டு பல இன மத மொழி பேசும் மக்கள் வாழ்கிறோம். ஆகையால் இந்த நாட்டில் உண்மை ஜனநாயகம் நிலவுகிறதா என்றல் இல்லை என்றே கூறுவேன்.

பல இன, மத, மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் பெரும்பான்மை ஆட்சியாகிய ஜனநாயக ஆட்சி பிழைத்துவிடுகிறது; பலம் இழந்து விடுகிறது.

### ஏன் சமஷ்டி கோருகிறோம்?

நாங்கள் ஏன் சமஷ்டி ஆட்சி முறையைக் கேட்கிறோம். எங்கள் நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து,

மக்களின் பெரும்பான்மைக் கட்சியால்தான் ஆட்சி நடைபெறுகிறது. ஆதலால் அரசாங்க நிர்வாகம் தனித்தனி இன மக்கள் வாழும் தனித்தனி மாநில அரசுகளாகப் பிரிக்கப்பட்டு ஓர் மத்திய அரசாங்கத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட்ட சமஷ்டி அரசியலில் அமைப்பே இலங்கை போன்ற பல இன மக்கள் வாழும் நாட்டின் சுபீட்சத்திற்கும் பெலத்திற்தும் உகந்தது என்று கூறுகிறோம்.

### பண்டா ஏற்றர்

இந்தத் திட்டத்தைச் சென்ற இருபது ஆண்டுகளாகக் கூறிவருகிறோம். இவ்வ

பிரதேச சபைகள் நிறுவுவதற்கு ஒப்பந்தம் செய்தார்.

அவர் ஏன் பிரதேச சபைகளை அமைப்பதற்குச் சம்மதித்தார்? அரசாங்க நிர்வாகத்தை மக்களிடம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதை அவர் உண்மையில் உணர்ந்தார். அவ்விதம் செய்தால் தான் அரசியல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண முடியும் என்று அறிந்தார். அதனல் தான் அவர் பிரதேச சபை அமைப்பதற்கு எங்களோடு இணக்கம் தெரிவித்து ஒப்பந்தத்திற்கு வந்தார்.

காவிடம் விடுத்த கோரிக்கைகளில் மாவட்ட சபையும் ஒன்றாகும். நாம் மாவட்ட சபைகள் கோரிய போது, தனியே வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கோ அல்லது இந்நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமோ கேட்கவில்லை. நாடு முழுவதற்குமே மாவட்ட சபை கேட்டோம். அதிகாரம் பரவலாக்கப்படுவதே இந்நாட்டின் முதல் தேவையென நாம் அழுத்தமாக நம்புகிறோம்.

### 19-ம் நூற்றண்டில்

மத்திய அரசாங்கத்தில் அதிகாரம் முழுவதும் குவி

டில் உண்மையான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பவும், நல்லெண்ணமும் அமைதியும் இந்நாட்டில் ஏற்படவும், இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களை அழித்துவிடாதபடி தடுக்கவும் நமக்[illegible]ம் ஒரே வழி, இரண்டு அல்லது மூன்று அரசுகளைக் கொண்ட சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்தல் அல்லது ஒரு சமரசத் திட்டமாக பிரதேச சபைகளை நிறுவுதல் என்றே நாம் உறுதியாக நம்புகிறோம்.

எங்கள் கூற்றில் உள்ள உண்மையை அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் உணரவைக்கும் பணியில் நாம் தோல்வியடைந்துவிட்டதாகவே உணருகிறோம்.

### தாக்கப்படும் காரணம்

ஒரேயொரு காரணத்துக்காகவே நாம் நிந்திக்கப்படுகிறோம்; தாக்கப்படுகிறோம்; கண்டிக்கப்படுகிறோம். நமது நோக்கங்களிலும், இலட்சியங்களிலும் விடாப்பிடியாகவும் உறுதியாகவும் இருந்து வருவதும், இச்சபையிலுள்ள இனவெறியர்களின் விருப்பங்களுக்கு எல்லாம் நாம் தாளம்போட மறுப்பதும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி நாம் மாற மறுப்பதுமே அக்காரணமாகும்.

இத்தகைய திட்டவட்டமான கொள்கையை கொண்ட எமது கட்சி—நாம் சந்தர்ப்பவாதிகளாகஇருக்க வேண்டுமென உள்ளூர ஆசைப்படும் பலரது தாக்குதலுக்கும் ஆளாகிவருகிறது. இதன் காரணமாக ஒருவேளை நாம் செல்வாக்கில்லாதவர்களாக இருக்கலாம்.

## தமிழர்களைப் பிரிக்க சிறிமா பண்டாரநாயக்க

## போட்ட திட்டமே இந்துப் பல்கலைக்கழகம்!

ளவு காலமும் ஒரு தனிப்பட்டவரே, அல்லது ஒரு அரசாங்கமோ, அல்லது ஒரு பிரதம மந்திரியோ இக்கொள்கை இந்த நாட்டிற்குச் சரியானதா, உகந்ததா, நீதியானதா என்று சிந்தித்துப்பார்த்தனரா? இதற்குச் செவிசாய்த்தவரோ கவனம் செலுத்தினவரோ எவரும் இல்லை. ஆனல் எல்லோரினதும் எல்லாக் கட்சியினதும், ஏச்சிற்கும், பேச்சிற்கும், தாக்குதலுக்கும் இச் சபையிலும் வெளியேயும் ஆளாகி வருகிறோம். இந்த நாட்டின் அரசியற் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனநாயக முறையிலமைந்த அரசாங்கம் தான் தேவை என்பதை எவரும் கவனத்துக்கு எடுப்பதாயில்லை.

முன்னொரு காலத்தில் சமஷ்டி ஆட்சி தத்துவமே இந்நாட்டின் அரசியற் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏற்றது உகந்தது என்று கூறிய முன்னை நாள் பிரதமர்

அவர் எங்களோடு பிரதேச சபை அமைப்பதற்குச் சம்மதித்து ஒப்பந்தத்திற்கு வந்துள்ள நேரத்தில் இந்த நாட்டின் அரசாங்கத்தை நடத்துவதற்கு எங்கள் உதவி அவருக்குத் தேவைப்படவில்லை. அவருக்குப் போதிய ஆதரவு இருந்தது. அதனல் அவர் எவ்வித அரசியல் லாபத்தையும் பெறவில்லை.

இந்நாட்டின் அரசியல் பிரச்சினை தீர்வதற்கு பிரதேச சபை அமைப்பு ஓர் வழி என அவர் உண்மையில் உணர்ந்தார். எங்களோடு அவர் ஒரு சமாதானத்திற்கு வந்தார் — என்று தான் சொல்லவேண்டும். இந்த நாட்டின் சோஷலிச இடதுசாரிகளைப் பற்றி அவர் தன் மனதில் எண்ணிப் பார்ப்பதற்கு முன்னமேயே எங்களோடு இணக்கமான சமாதானத்திற்கு வந்தார்.

திருமதி பண்டாவும் ஏற்றர்

[illegible] திருமதி பண்டாரநாயகா

ந்து கிடப்பதால் இந்நாட்டு மக்களின் தேவைகளும் அபிலாஷைகளும் புறக்கணிக்கப் பட்டுவருகின்றன. நாம் அணுயுகத்தில் வாழுகிறோம். விரைவில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு உலகில் நாம் இன்று வாழுகிறோம். ஆனல் இந்நாட்டை பொறுத்தவரை — இந்நாட்டின் அரசாங்க நிர்வாக இயந்திரமோ பத்தொன்பதாம் நூற்றண்டினதாக இருக்கிறது.

### நமது உறுதி

எனவேதான் இந்நாட்டில் செய்ய வேண்டிய உடனடி வேலை அதிகாரத்தைப் பரவலாக்குதேயென்பதை உணர்ந்த நாம், பிரதமரிடம் மாவட்டசபைகளைக் கோரினேம். அவர் எங்களது கோரிக்கைக்கு உடன்பட்டார். ஆனல் நெருக்கடியாலும் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகளாலும் அவரால் அதை நிலைநாட்ட முடியாமற்போய்விட்டது. இந்நாட்

எங்கள் விசுவாசம், எங்கள் நேர்மை, எங்கள் பெருந்தன்மை இவற்றையும், எந்தக் கஷ்டம் வந்தாலும் கொடுத்த வாக்குறுதியை நாம் காப்பாற்றியே தீருவோம் என்பதையும் அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சிகளும் அறிந்துகொண்டிருப்பதால் உதவி தேவைப்படும் போதெல்லாம் அவர்கள் எங்களை நாடி வந்திருக்கிறார்கள்.

### நிகழ்காலத்தில் வாழ்பவர்கள்

எனவே, எமது நேர்மைக்காகவும் நாணயத்துக்காகவும், அரசியல் விஞ்ஞ[illegible] ரீதியாக இந்நாட்டிலு[illegible] எந்தச் சிறுபான்மை மக்களின் கட்சியும் எடுக்கவேண்டிய சரியான நிலையை நாம் எடுத்த காரணத்தாலும் நாம் தண்டிக்கப்படுவது எனது கட்சியின் துரதிருஷ்டம் என்றே கருதுகிறேன். சமஷ்டி ஆட்சி அமைப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரத்துக்காக கடைசித் தமிழன்
# வின்றிப் போராடுவோம்!

## தலைவர் சி. மூ. இராசமாணிக்கம் எம். பி. கர்ஜனை

அல்லது வேறு எவ்வித வடிவில் என்ருலும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதோ ஒருபோதும் நடைபெறமுடியாத பகல் கனவு என்றும், கோரிக்கை விடவோ வென்றெடுக்கவோமுடியாத இலட்சியம் அது என்றும் கருதும் நண்பர்கள் நிகழ் காலத்தில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள்; வருங்காலத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை என்று கூற ஆசைப்படுகிறேன்.

கிழக்குமாகாணம் சமஷ்டி அரசியற் திட்டத்தை நிராகரித்து விட்டதாக எனது நண்பர் கல்குடா எம். பி. திரு. தேவநாயகம் கூறியிருக்கிருர்' கடைசித் தமிழன் அழிக்கப்படும் வரை நாம் சமஷ்டி அரசியலுக்காகப் போராடப் போவதாகவும் அவர் பேசியிருக்கிருர்.

நான் அவருக்கு உறுதியாகக் கூறுவேன்—நாம் ஓர் சமஷ்டி அரசியற்திட்டத்துக்காகப் போராடுவோம்; இந்நாட்டில்தமிழ் பேசும் மக்களுக்கு கௌரவமான இடத்தைப்பெறுவதற்காகத் தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்; இந்நாட்டிலுள்ள எந்த இனத்துக்கும் கீழ்ப்படாத இனமாகத் தமிழினத்தைக் கட்டியெழுப்ப நாம் போராடுவோம்; இவற்றைப் பெறுவதற்காக இந்நாட்டிலுள்ள கடைசித் தமிழன் இருக்கும்வரை நாம் போராடியே தீருவோம்.

### உடைக்க முயற்சி

கல்குடா எம். பி. நிகழ் காலத்தைத் தான் பார்க்கிருர். அவர் எதிர்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

கல்குடா எம். பி. மட்டக்களப்புத் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்குமிடையே ஓர் உடைப்பை ஏற்படுத்தப் பாடுபடுகிருர். அவருக்கும் யாழ்ப்பாணத்துக்குமுள்ள தொடர்பு மிக அண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. எனக்கும் யாழ்ப்பாணத்துக்குமுள்ள தொடர்பு பழமையானது.

கரையோரச் சிங்களவர் பலர் மலைநாட்டில் சென்று குடியேறி அதைத் தமது இருப்பிடமாக மாற்றியிருப்பது போலவே, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருமலை போன்ற பகுதிகளில் வாழ்பவர்கள் வேருேர் பகுதியிலிருந்து வந்து குடியேறி மணம் முடித்து அவ்விடங்களிலேயே வாழலாம். அவர்களது தந்தைமாரோ, பாட்டன்மாரோ வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கலாம். அவர்கள் தூரத்திலிருந்து வந்திருந்தாலும் சரி, கிட்டத்திலிருந்து வந்திருந்தாலும் சரி அவர்கள் எல்லோரும் தமிழினத்தவர்கள்; தமிழனை மட்டக்களப்புத் தமிழன், திருமலைத் தமிழன், முல்லைத்தீவுத் தமிழன், மன்ஞர்த் தமிழன், என்று பாகுபடுத்திப் பிரிப்பதற்கு எதுவித காரணமும்கிடையாது.

க்க வாக்குறுதியளித்திருந்தோம். எனினும், எங்கள் கட்சியிலுள்ள எம். பி.க்கள் எவரும் பதவி ஏற்பதில்லை என்று செயற்குழுவில் முடிவு செய்தோம்.

மந்திரிப் பதவிக்காக எனது பெயரும் சிபார்சு செய்யப்பட்டது. ஆனுல் நான் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி உறுப்பினர்கள் எவரும் பதவி ஏற்கக் கூடாதென்று கூறினேன். இவ்விஷயம் எமது குழுவில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் சாரம், எம். பீ. க்கள் எவரும் பதவி ஏற்பதில்லையென்பதாகும். என்வே நான் கல்குடா எம். பீக்கு கூறுவேன்—பாரபட்சம் என்ற பேச்சு எழவே இடமில்லை.

குடா எம். பி. கூறினுர். இது ஓர் போலியான வேதனை தரத்தக்க கூற்ருகும். ஏனெனில் அம்மகஜரில் மிகத் தெளிவான முறையில் இக் கோரிக்கை தட்டச்சு மூலம் பொறிக்கப்பட்டிருந்தது. ஏனைய பல உறுப்பினர்களும் கையொப்பமிட்டிருந்தனா.

### திருமலை

வட மாகாணத்துக்கு அண்மியதாக கிழக்கு மாகாணத்தில் ஓரிடத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்று அதில் கூறியிருந்தோம். இதன் பொருள் திருகோணமலை அல்லது திருமலைக்கு கிட்டிய இடம் என்பதுதான். இது திருகோணமலையாக இல்லாவிட்டால், வாகரையாகவோ, பனிச்சங்கேணியாகவோ நிச்ச

ரக்கல் 10-5-59ல் திருமலையில் நாட்டப்பட்டது. எல்லாத் தமிழ்த் தலைவர்களும் அப்போது பிரசன்னமாயிருந்தனர்.

யாழ்ப்பாண மாநகரசபை 26.6.66ல் திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவும்படி அரசாங்கத்தை கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது: இந்தத் தீர்மானம் பிரபல தமிழ்க் காங்கிரஸ் பிரமுகரான முதலியார் முத்துத்தம்பி அவர்களால் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது அவர் என்ன கூறியிருந்தார் என்பதை இங்குகூற விரும்புகிறேன்.

''தமிழர்களுக்கு நடுநாயகமான இடம் திருகோணமலை தான்''

## இராமநாதன், நாவலர் சொத்துக்களின் வருமானம் இரண்டு பேராசிரியர்களின் சம்பளத்துக்கே போதாது!

இந்நாட்டுத் தமிழினம் ஒரே தேசிய இனமே. தமிழர்களின் சுதந்திரம், தமிழர்களின் மொழி, தமிழ்ப்பிரதேசம் எந்த விலை கொடுத்தென்ருலும் காப்பாற்றப்பட வேண்டும்.

### என்னையே கேட்டனர்

என்னிடம் சபை நடவடிக்கைப் புத்தகம் இல்லை. ஆனுல் புதினப்பத்திரிகைகளின்படி, கல்குடா எம். பி. மட்டக்களப்பு மனிதனுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்பட்டதாக கூறியதாக அறிந்தேன். அவர் கூறிய சம்பந்தப்பட்ட பகுதியை இங்கு வாசிக்கிறேன்.

"பதவி ஏற்கக் கூடிய தகுதி கட்சியின் சிரேட்ட உறுப்பினரும் தமிழரசுக் கட்சித் தலைவருமான பட்டிருப்பு எம். பி. திரு சி. மூ. இராசமாணிக்கம் அவர்களுக்கே உண்டு. ஆனுல் அவர் ஒரு மட்டக்களப்பு மனிதர் ஆகையால் மட்டக்களப்பு மனிதரான அவருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது''

1965ம் ஆண்டு மார்ச்24ந் தேதி தேசியஅரசாங்கம் ஏற்

கல்குடா எம். பி கூறியதில் துளி கூட உண்மையில்லை.

### நமது நிலை

எங்கள் கட்சி உடனடி இலாபங்களுக்காகவோ பதவிகளுக்காகவோ ஒருபோதும் இயங்கவில்லை யென்பதை இது ஒன்றே நிரூபிக்கிறது. நாங்கள் சில அடிப்படை உரிமைகளைக் கோருகிருேம். நாம் எப்போதும் ஒரு அடிப்படைக் கொள்கையுடன் செயற்படுகிருேம். மந்திரிப் பதவிகள் பெறுவதை விட எமது இனத்துக்கும் மொழிக்கும் பிரதேசத்துக்கும் சில குறிப்பிட்ட உரிமைகளை, சலுகைகளை வென்றெடுக்கவே நாம் பாடுபடுகிருேம்.

### பல்கலைக் கழகம்

அடுத்து, நாம் கோரும்பல்கலைக்கழகத்தைப் பற்றி சில விஷயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனெனில் அப்பிரச்சினை அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது.

வடமாகாணத்துக்கு அண்மியதாக கிழக்கு மாகாணத்தில உள்ள ஓரிடத்தில் ஓர்

யம் இருக்கவே முடியாது. திருமலை அல்லது வவுனியாவாகத்தான் இந்த இடம் இருக்கமுடியும். இந்த இடம் வவுனியாவாக இருந்தால், அது நிச்சயம் வடமாகாணம் ஆகமாட்டாது. எவ்வகையிற் பார்த்தாலும் ஏற்ற இடம் திருகோணமலை தான். மகஜரில் கையொப்பமிடும்போது கல்குடா எம். பி. எந்த இடத்தைக் கருத்தில் வைத்திருந்தார் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. தேவநாயகம்:— எனக்கு என்ன சொல்லப்பட்டதென்று உங்கள் தலைவரைக் கேளுங்கள்!

இராச:—வடமாகாணத்துக்கு அண்மியதாக கிழக்கு மாகாணத்தில் உள்ள ஓரிடத்தில் அது நிறுவப்பட இருக்கிறது என்று உமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும்!

### வரலாறு

பல்கலைக்கழகம் அமைப்பதற்கு திருகோணமலையைத் தகுந்த இடமாக நாம் ஏன் தேர்ந்தெடுத்தோம் என்

என்று அவர் கூறியிருந்தார். இது சிலோன் டெயிலி நியூஸ் ஏட்டின் 26-6-66 இதழில வெளியிடப்பட்டிருந்தது.

### இராமநாதன் பல்கலைக்கழகம்

இப்போதைய எதிர்க்கட்சித் தலைவியார், பிரதமராகப் பதவிவகித்த காலத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் என்ற கருத்தை தட்டிக் கொடுத்து வளர்த்தார். 1962-63 வரவு செலவுத் திட்டத்தின்போது அடையாள மானியம்கூட ஒதுக்கப்பட்டது. இதன் உள் நோக்கம் தமிழர்களுக்கு ஓர் பல்கலைக் கழகம் வேண்டும் என்ற இயக்கம் வளர்வதையும், தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தையும் முளையிலேயே கிள்ளியெறிவதாகும்.

### சிறிமா திட்டம்

திருமதி சிறிமாவின் திட்டம் மிகவும் நுண்ணியதாகும். யாழ்ப்பாணத்தில் இந்து அல்லது இராமநாதன் பல்கலைக் கழகம் என்ற கருத்துக்கு நீரூற்றி வளர்ப்பதன் மூலம், மட்டக்களப்பு-யாழ்ப்பாணத் தமிழர்களிடையே ஒரு வெடிப்பை ஏற்படுத்தலாமென்று அவர் திட்டமிட்டார். மட்டக்களப்பில் பல்கலைக் கழகம் அமைப்பதை எப்படி நான் வரவேற்பேனே அதேபோல திருமலையில் நிறுவப்படுவதையும் வரவேற்கிறேன்.

யாழ்ப்பாண மாணவர்களுக்கும், மட்டக்களப்பு மாணவர்களுக்கும் நடு நாயகமாக விளங்கக் கூடிய இடம் திருமலை என்றே நாம் கருதுகிருேம்.

இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாத தேவையாகும்.

(9ம் பக்கம் பார்க்க)

## உண்மை ஜனநாயகம் மலர சமஷ்டி ஏற்பட்டே தீரவேண்டும்!

என்னைப் பொறுத்தவரை இந்நாட்டிலே ஒரேயொரு தமிழ்ச் சமுதாயமே இருக்கிறது. சிங்கள மக்கள் கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்று பிளவுபட்டால் சிங்கள இனத்தின் ஒற்றுமை சிதறும். நாங்கள் தமிழினத்தவரை மட்டக்களப்புத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் என்று பிரித்தால், இனத்தின் ஒற்றுமை சிதறி விடும்.

பட்ட நேரத்தில், பேச்சு வார்த்தையின் போது கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். 25-ம் திகதி காலையில் மந்திரிப் பதவி ஏற்க எமக்குச் சம்மதமா என்று கேட்டும் அப்படிச் சம்மதமானுல் எத்தனை பதவிகள் வேண்டும் என்று தெரிவிக்கும்படியும் எம்மிடம் ஒரு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அச்சமயம் நாம் அரசாங்கத்துக்கு ஆதரவு அளி

பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று பிரதமரிடம் ஓர் கோரிக்கை சமர்ப்பித்திருந்தோம். இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரில் வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர். அம் மகஜரில் கையொப்பம் வாங்குவதற்காக தமிழரசுக் கட்சி தம்மை ஏமாற்றி விட்டதாக நேற்று இச்சபையில் கல்

பதை நான் இங்கு எடுத்துக் கூறவேண்டும். இந்நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்களிடையே 1956ம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் என்ருெரு இயக்கம் தொடங்கப்பட்டது. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைத் தவிர— சகல தமிழ்த் தலைவர்களும்— திரு. சுந்தரலிங்க முட்பட— இவ்வியக்கத்தில் சேர்ந்தனர். எதிர்காலப் பல்கலைக் கழகத்துக்கான அத்திவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான தமிழ் அரசு ஊழியர்களை

# அநியாயமாகப் பழிவாங்குகிறீர்களே!

# இதுதான் உங்கள் நீதியா?

"திறைச்சேரியின் 700, 701ம் இலக்கச் சுற்றறிக்கைகள் கூறுவனவற்றை, மூன்று நான்கு வழிகளில் நிதியமைச்சு மீறிவருகின்றது.

பழைய அரசாங்க ஊழியர்கள் சிங்கள தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டனர். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற விடயங்களில், பழைய ஊழியர்களுக்கு சிங்களம் தேவைப்பட மாட்டாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் என்ன நடைபெறுகிறது? பதவி உயர்வுக்காக தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு நேர்முக பரீட்சை நடைபெறும்போதெல்லாம், அவர்களிடம் கேட்கப்படும் முதலாவது கேள்வி அவர்களது சிங்கள அறிவுபற்றியதுதான். 700 வது திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தாங்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டியதில்லையென்று நம்பிக்கையூட்டப்பட்டிருந்த இந்தத்

றது. இதன் பொருள் என்னவென்றால், அவர்கள் சித்தியடையவேண்டிய மூன்றாவது தரப்பரீட்சையின் தராதரம் குறைக்கப்படுவதற்குப் பதிலாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதே. ஒரு அரசாங்க ஊழியனுக்கு நன்மையாக இருக்க வேண்டிய விதி இன்று திறைசேரியால் ஒரு சாபத்தீடாக மாற்றப்பட்டுவிட்டது.

கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அரசாங்கக் கட்சியிலிருந்து கொண்டே இப்பிரச்சினையை இச் சபையில் எழுப்பினேன். சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் தராதரம் மிகவும் அதிகரிக்கப்பட்டுவிட்டதென்பதை அப்போது எடுத்துக் கூறியிருந்தேன். எனக்குச் சிங்களம் தெரியாததால், கேள்வித் தாள்களை மொழி பெயர்ப்பித்து இச் சபையில் சமர்ப்பித்திருந்தேன். நிதியமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்து இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறியிருந்தேன். தாம் அதைப் பார்ப்பதாக அவரும் வாக்கு

எனினும், தேர்ச்சியின்மை அவர்களுக்கு ஒரு தடையாக இராது என்று கூறப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டுமுதல் ஸ்கொலர்ஷிப்பில் செல்லும் டாக்டர்களுக்குக்கூட தடை (BAR) விதிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து அரசாங்கம் ஒவ்வொரு விடயத்திலும் பழைய நிலைக்கே சென்றுகொண்டிருப்பது தெளிவாகிறது.

### பெருமையான விஷயமா?

அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், ஓரிருவரல்ல; சில நூற்றுக்கணக்கானவர்கள் அல்லது ஆயிரக்கணக்கானவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். இது பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமா?

நாங்கள்தான் அவர்களைச் சிங்களம் படிக்கவேண்டாமென்று தடுத்தோம் என்று கூறப்படலாம். ஆம், எதிர்ப்பின் எடுத்துக்காட்டாக, 1965 வரை இந்த அரசாங்க ஊழியர்களை சிங்களம்படிக்க மறுக்கும்படி நாம் கேட்டது உண்மை; ஆனால் அதன்பின்

தேர்ச்சி பற்றி எதுவித குறிப்புமின்றியே நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் கடந்த ஆண்டு இந்த அரசாங்கத்தின்கீழ், கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர், இச்சிற்றூழியர்கள் மீதும் மொழி நிபந்தனையை திணித்திருக்கிறார். இவர்களில் பலருக்கு சம்பள உயர்வு மறுக்கப்பட்டிருக்கிறது; இன்னும் சிலருக்கு முன்பு வழங்கப்பட்டிருந்த சேவை உறுதியும் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதைச் செய்யும் அரசாங்கம்தான் சகலருக்கும் நீதியும் சமசந்தர்ப்பமும் வழங்கப்போவதாகப் பறை தட்டுகிறது!

### இலங்கை இந்திய ஒப்பந்தம்

அடுத்து, இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்காக ஒரு முக்கியமான சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி, இந்தியப் பிரஜைகளாக ஏறத்தாழ 40,000 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

ணமே — தோட்டப் பகுதிகளில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களுக்குப் பிரஜாவுரிமை வாக்குரிமை மறுக்கப்பட்டதுதான். அதனால் தான் இப்பிரச்சினையில் நாம் கவலைப்படுகிறோம். இந்நாட்டுத் தமிழ் மக்களின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக நாம் அவர்களைக் கருதுகிறோம். எனவே தான் அவர்கள் என்றென்றும் நாடற்றவர்களாக இருப்பதை நாம் விரும்பவில்லை. அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டுமென்று நாம் கூறுகிறோம். அந்த நோக்கத்துடன் தான் நாம் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்தோம். ஆனால் செயலில் கால தாமதம் காட்டப்படுகிறது. இது ஏன்? தமிழ் மக்களின் நன்மைக்கான காரியங்கள் எதுவாக இருந்தாலும் — சிறியளவு நன்மை தரக் கூடியதென்றால் கூட — அது தாமதப்படுத்தப்படுகிறது; அது அமுல் நடத்தப்படுவதில்லை. ஆனால் தமிழ் மக்களுக்குப் பாதகமானதும் சிங்கள மக்களுக்குச் சாதகமானதுமான விடயங்கள் உடனடியாகவும், பூரணமாகவும் அமுல் நடத்தப்படுகிறது.

### கஷ்டம்

இவைமட்டுமல்ல, பிரஜாவுரிமை சம்பந்தமாகப் பேசும்போது, இலங்கைத் தமிழர்களும் இலங்கை முஸ்லிம்களும் தாங்கள் வாங்கும் காணியைப் பதிவுசெய்வதில் படும் கஷ்டங்களையும் குறிப்பிட விரும்புகிறேன். முந்திய அரசாங்கம் இப்பிரச்சினை பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழு, இலங்கைத் தமிழர்களும் இலங்கை முஸ்லிம்களும் தங்கள் காணி உறுதிகளைப் பதிவு செய்வதற்காகத் தமது பிரஜாவுரிமையை நிரூபிப்பதில் படும் கஷ்டங்களைப் போக்குவதற்குச் சில வழி வகைகளைச் சிபார்சு செய்தது. ஆனால் இந்த அரசாங்கம்

## மலைநாட்டுத் தமிழர் எம் இரத்தத்தின் இரத்தம்!

## அவர்களுக்கு உரிமை வழங்க ஏன் இந்த இழுத்தடிப்பு?

தமிழ் அரசாங்க ஊழியர்கள், பதவி உயர்வு கிடைக்காமல் பழிவாங்கப் படுகிறார்கள். இதுதான் பாரபட்சமின்மையா? இதுதான் நீதி வழங்கும் இலட்சணமா என்று பிரதமரைக் கேட்கிறேன்!

### புதிய ஊழியர் பிரச்சினை

நான் புதிய அரசாங்க ஊழியர் பிரச்சினைக்கு இப்போது வருகிறேன். இவர்களுக்கு முந்திய அரசாங்கம் நான்கு பரீட்சைகளை நடத்தியது. மூன்றாவது தரமட்டத்தில் (கிரேட்-3)—அதாவது எட்டாம் வகுப்பு தராதரத்தில்—பதவியில் உறுதிப்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் எஸ். எஸ் சி. தரத்தில் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருந்தது. இது தான் நான்காவது பரீட்சை. ஆனால் இன்று என்ன நடைபெறுகிறது?

இந்த அரசாங்கம் 701வது திறைசேரிச்சுற்றறிக்கையின் பிரகாரம், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கத்துடன் அவர்கள் சித்தியடைய வேண்டிய தராதரத்தை ஜே. எஸ். சி. ஆகக் குறைத்தது. இதுதான் அவர்கள் சித்தியடைய வேண்டிய ஆகக்கூடிய வகுப்பு ஆகும். இன்று நடைபெறுவதென்னவென்றால், முந்திய அரசாங்கத்தின்போது விதிக்கப்பட்டிருந்த நான்கு பரீட்சைகளும், மூன்று பரீட்சைகளுக்குள் திணிக்கப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் முன்னிலையில் பிரதமருடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தையின் போதும் முந்திய நான்கு பரீட்சைகளும் இப்போதைய மூன்று பரீட்சைகளுக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கி

றுதியளித்தார். அதோ அவர், முன்வரிசையிலிருந்து கொண்டு ஏதோ ஒரு கடதாசியை இப்போதும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்! சபாநாயகர் அவர்களே! அவர் பார்ப்பது என்பது அவ்வளவுதான்! நாங்கள் இப்படித்தான் நடத்தப்பட்டு வந்திருக்கிறோம். 701 வது திறைசேரி சுற்றறிக்கையால் தங்களுக்கு சிறிதளவாவது ஆறுதல் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தவர்கள் புதிய தொல்லைகளுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். பரீட்சையின் தராதரம் குறித்து நான் கூறவிரும்புவது இவ்வளவுதான்.

### சிற்றூழியர்கள்

தமது அன்றாட பணிகளுக்கு சிங்கள மொழியறிவு அவசியமற்ற சிற்றூழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன? யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான காவலாளிகள், தொழிலாளர்கள், பூந்தோட்டத் தொழிலாளர்கள், மற்றும் பல சிற்றூழியர்களும் திறைசேரிச் சுற்றறிக்கையின் கீழ் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

701வது சுற்றறிக்கையின் கீழ் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அரசாங்கமும் திறைசேரியும் அளிக்கும் மரியாதை—காட்டும் கௌரவம் இப்படித்தான் இருக்கிறது.

டாக்டர்கள் போன்ற தொழில் நுட்ப அதிகாரிகள் ஸ்கொலர்ஷிப் மற்றும் தேவைகளுக்கு ஒரு குறிப்பிட்டளவு தராதரத்தில் தேர்ச்சியடைய வேண்டுமென்று கோரப்படுவார்கள்

ளர் நீதி வழங்கப்படுமென்ற நம்பிக்கையில், புதிய திறைசேரிச் சுற்றறிக்கை வெளிவந்ததும், சிங்களத்தைப் படிக்கும்படி நாம் அவர்களுக்கு ஆலோசனை கூறினோம். ஆனால் சில்லறை ஊழியர்களும் மற்றும் சிலரும், இப்புதிய திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தங்களுக்கு விதிவிலக்கு கிடைக்குமென்று எதிர்பார்த்தனர். அவர்களே இன்று பதவிநீக்கப்படுகிறார்கள். பதவிநீக்கம் செய்யப்படுபவர்களி

இலங்கைப் பிரஜைகளாக எத்தனை பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதமரைக் கேட்க விரும்புகிறேன்! இந்தியப் பிரஜைகளாக 40,000 பேர் பதிவு செய்யப்பட்டிருந்தால், 12:21 என்ற விகிதாசாரப்படி ஒருகுறிப்பிட்ட தொகையினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இதுவரையில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நான் கேள்விப்பட்டபடி, இதுவரை 300 பேருக்குத்தான்

## பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்—2.

டையே முன்னர் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு பெற்றவர்கள் கூட இருக்கிறார்கள்.

### இதுதான் நீதியா

உண்மையில், கடந்த அரசாங்கத்தின் காலத்தில்கூட, வடக்கு கிழக்கு மாகாணங்களில், உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், விடுதிச்சாலைகளிலும் பயிற்சிக்கலாசாலையிலும் வேலைசெய்யும் சில்லறை ஊழியர்கள்போன்றோருக்கு சிங்கள மொழித்

இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

எனது வெலிமடை நண்பர் பேர்சி சமரவீரா கேட்கிறார் - நாங்கள் ஏன் அதுபற்றிக் கவலைப்படுகிறோமென்று. நாட்டு மக்கள் அனைவருக்கும் நீதிவழங்கப்படவேண்டுமென்று நாம் விரும்புகிற காரணத்தால் தான் நாங்கள் கவலைப்படுகிறோம்.

உண்மையில் எங்கள் கட்சி தோன்றுவதற்கு மூலகார

இத்திகதிவரை, இத்தகைய கஷ்டங்களை நீக்குவதற்கு எதுவும் செய்திடவில்லை. சிறுபான்மையினருக்கு நன்மையான எந்தக் காரியமும் அலட்சியப்படுத்தப்படுகிறது; குளிர் அறைக்குள் தள்ளப்படுகிறது; மறக்கப்பட்டதாகி விடுகிறது; என்பதற்கு இதுவும் மற்றோர் உதாரணமாகும். பெரும்பான்மை இனத்துக்கு நன்மையான காரியம் எதுவென்றாலும் அது உடனடியாகநடைமுறைப்படுத்தப் படுகிறது.

—வளரும்

## சலுகைகளுக்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

டில் வாழும் எல்லா இன மக்களுக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தத்தக்க வகையில் ஓர் ஆட்சித் திட்டம் இல்லாதபடியாலே தான், [illegible] களுடன் சமாதானம் செய்ய விரும்புகிற பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்களுடைய உதவியைக் கேட்டுப் பெற்றுவிட்டு "ஆறு கடக்கும்வரை அண்ணன் தம்பி; ஆற்றைக் கடந்த பின்னர் நீ யாரோ, நான் யாரோ, என்று சொல்லுகிற வரலாறுதான் திரும்பத் திரும்ப இந்த நாட்டின் அரசியல் வரலாறாக இருந்து வருகிறது. இப்படி இருந்தால் இங்குள்ள இனங்களிடையே எந்தவிதத்தில் ஒற்றுமை ஏற்படும்; எந்தக்காலத்தில் ஏற்பட முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினபதி மீது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபை நடவடிக்கைப் புத்தகத்தின்படி, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இயலாத தமது நிலையை தமிழரசுக் கட்சியினருக்கு எடுத்துக் கூறி பதவியிலிருந்து வெளியேறத் தாம் தயாராக இருப்பதாக அவர்களிடம் தெரிவித்தபோது, அவர் பதவியிலிருந்து விலகுவது தமக்கு உதவுவதாக ஆகாதென்றும் அதனால் அவர் பதவியிலிருந்து வெளியேறுவது அவசியமில்லையென்றுமே தமிழரசார் கூறியதாக பிரதமர் கூறியிருக்கிறார்.

''இவ்விஷயம் இப்பத்திரிகையில் ஓர் இதழில் அல்ல, மூன்று இதழ்களில் திரித்துக்கூறப் பட்டிருக்கிறது. சபையில் நிகழ்த்தப்படும் பேச்சுக்கள் இப்படித் திரித்து வெளியிடப்படுவதை தடுப்பதற்கு சபாநாயகர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்''

சபாநாயகர் பதிலளிக்கையில் பிரச்சினைக்குரிய பத்திரிகையின் மூன்று இதழ்களையும் தமக்கு உறுப்பினர் சமர்ப்பிப்பாரானால் அதைப்பார்வையிட்டு தேவையாயின் நடவடிக்கையெடுப்பதாகத் தெரிவித்தார்.

## குருநாக்கலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றியும் அவர்களிடம் இருந்த பணமும்பறித்தெடுக்கப்பட்டுள்ளது. பயமுறுத்தலுக்கும் மானம் போய்விடுமே என்றும் அஞ்சிய ஆசிரியர்கள் தாங்க முடியாத வேதனையோடு வாழாவிருக்கிறார்கள்.

இச்சம்பவம் பற்றி அவ்வாசிரியர்களில் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது:-

தமிழன் தான் பிறந்த நாட்டிலேயே நாதியற்ற வனுக்கப்பட்டுள்ளான். பிறந்த மாநிலத்தில் வாழ வழியில்லை. பிழைக்க வந்த இடத்திலும் மானத்தோடு வாழவழியில்லை, இது தான் தமிழன் தலை விதியா? இந்த நிலையில் ஒற்றை ஆட்சி, இன ஒற்றுமை என்ற மாய் மாலப் புலம்பல், தேசிய ஐக்கியம் என்ற பசப்பு வார்த்தை, சோசியலிசம் என்றவறண்ட கூச்சல் இவைக்குக் குறைவில்லை. இவை தான் தமிழனுக்கு ஒருரோடா? உழுத்துப் போன, செத்த, செல்லரித்த கொள்கைகளையுடைய, அரசியல் தெரியாத அரசியல் அறம் தெரியாத அற்பர்கள் எம்மின மத்தியிலே அரசியல் விபசாரம் செய்து கொண்டிருக்கும் வரை எமக்கு இந்த நிலைதான்'

# அரசாங்கத்தை எதிர்க்க நவரத்தினம் தயங்குவதேன்?

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு.வி. நவரத்தினம் அரியணை உரைக்கு எதிராக வாக்களியாமல் வாக்கெடுப்புச் சமயத்தில் சபையிலிருந்து மெதுவாக நழுவிவிட்டது ஏன்? இது ஒன்றே பாலுக்கும் காவலாகவும் பூனைக்கும் தோழனாகவும் அவர் வேஷம் போடுகிறார் என்பதைக் காட்டவில்லையா?

—இவ்வாறு தமிழரசுப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

திரு. நவரத்தினம், 1968ம் ஆண்டு அரியணை உரை விவாதத்தின் போதும் எதிர்க்கட்சியிலேயே இருந்தார். அன்றும் அவர் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. இந்த ஆண்டும் அரியணை உரையை எதிர்த்து அவர் வாக்களிக்காமல் மெதுவாகச் சபையிலிருந்து கழன்று விட்டார். அரசாங்கத்தை எதிர்ப்பதாகப் பொது மக்களுக்குக் காட்டிக் கொண்டும், அதே சமயம் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்காமலும் அவர் இரட்டை வேடம் போடுகிறார். அரசாங்கத்துக்கு நல்ல பிள்ளையாக நடந்து ஏதாவது 'இலாபம்' பெற விரும்புகிறாரா? அல்லது அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு முதுகில் புண் இருக்கிறதா?

திரு. நவரத்தினம் கல்வியமைச்சர் இரியகொல்லைக்கு மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்து விட்டுப் பிரதமருக்கு விசுவாசமாக நடப்பதேன்? அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்க திரு. நவரத்தினம் தயங்குவதும், பிரதமர் தமிழரசுக்கட்சியைத் தாக்கிப் பேசும்போதெல்லாம் அவருக்கு உதவிக்கு ஓடுவதும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தைக் கண்டித்து பேசாது தமிழரசுக்கட்சியையே கண்டித்துப் பேசுவதும், ஊர்காவற்றுறையில் திரு. பிரேமதாசாவுக்கு இவர் அளித்த வரவேற்பின் போது கொழும்பில் வாழும் தீவுப்பகுதியைச் சேர்ந்த ஆண்கள் தமக்கும், ஊர்காவற்றுறைத் தொகுதியில் வாழும் அவர்களது மனைவிமார் நவரத்தினத்துக்கும் வாக்களிக்க வேண்டுமென திரு. பிரேமதாசா வேண்டுகோள் விடுத்ததும் தமிழ் மக்களுக்குத் திரு. நவரத்தினத்தின் நிலையைப் படம் பிடித்துக் காட்டப் போதுமானவை;

திரு. நவரத்தினம் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையைத் தமிழரசுக்கட்சி ஏன் ஆமோதிக்கவில்லை என்று கேட்டபோது அவர் கூறியதாவது:-

''தமிழ் பேசும் மக்களுக்கு இன்று பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் திரு. நவரத்தினம் இரு அரசாங்க ஊழியர்களை வெளியேற்றியது மட்டுமே தமிழ் பேசும் இனத்தின் ஒரே குறையென்ற கருத்துப்பட திருத்தப்பிரேரணை கொண்டு வந்திருந்தார். நமது கட்சி கொண்டு வந்த பிரேரணைக்குள் திரு. நவரத்தினத்தின் பிரேரணையின் சாரமும் அடங்கியிருந்தது. தமிழ் மக்களின் பல்வேறு குறைகளையும் கஷ்டங்களையும் நமது பிரேரணை பிரதிபலித்தது. எனவே திரு. நவரத்தினத்தின் தனிப் பிரேரணையை நாம் அனுமதிக்க வேண்டிய எந்த அவசியமும் ஏற்படவில்லை.''

## வரவுசெலவுத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு எந்தவிதமான மானியமும் ஒதுக்கப்படாத அதே சமயம், தமிழ் மக்களிடையே பிரிவினையை உண்டு பண்ணும் நோக்குடன் 1963ம் ஆண்டு திருமதி பண்டாரநாயகா அரசாங்கம் ஒதுக்கிவைத்த இராமநாதன் பல்கலைக் கழக அடையாள மானியமான பத்து ரூபா ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் இடம் பெற்று வருவது போலவே இம்முறையும் இடம் பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கிலுள்ள மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி வேலைகள், வடக்கே உப வானொலி நிலையம், பனம் பொருள் அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம். கிழக்கு மாகாணத்தில் கனிட்ட பல்கலைக் கழகம், பூனகரி மகாதேவா ப்பாலம், போன்ற எவ்வித திட்டங்களுக்கும் பணம் ஒதுக்கப்படவில்லை.

தமிழ்ப் பகுதிக்கு அரசாங்கம் அப்பட்டமாக பாரபட்சம் காட்டுவதற்கு இது ஒன்றே எடுத்துக்காட்டு என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

## செல்லக் கதிர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக சிலர் புத்தர் சிலையொன்றை வைத்துள்ளதாகவும், அதை உடனடியாக அங்கிருந்து அகற்றும்படியும் கோரி மேற்படி கோவில் நிர்வாகியான சுவாமி ராமகிரி கதிர்காமம் பொலீசில் புகார் செய்துள்ளதாகவும் தெரிகிறது.

தமது அனுமதியின்றிபுத்த பிக்கு ஒருவரின் தூண்டுதலின் பேரிலேயே புத்தர் சிலையும் தேசியக் கொடியொன்றும் தமது ஆதிக்கத்திலுள்ள காணிக்குள் நிறுவப்பட்டிருப்பதாக அவர் புகார் செய்துள்ளார்.

## ஒப்சவர் ஏடு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

**தெடுதனுப்ப வேண்டியது அவசியமாகிறது. அடுத்த பொதுத் தேர்தலில் இதைத் தமிழ் பேசும் மக்கள் சரியாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.**

பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சிக்கு எதிராகவுள்ள தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் சமஷ்டியை எதிர்ப்பதும் ஒற்றையாட்சியை ஆதரிப்பதும் ஏதோ இந்த அரியணை உரையின்போது மட்டும் திடீரென்று ஏற்பட்ட ஒரு மாற்றமல்ல. ஆனால் ஒப்சேவர் கட்டுரையாளர் இப்போது இதைத் தூக்கிப் பிடித்து வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பதன் சதித் திட்டம் நமக்குப் புரிகிறது. யூ. என். பி. ஆட்சியை விட்டு தமிழரசுக்கட்சி வெளியேறிவிட்டதனால் நாட்டின் தேசிய ஒற்றுமை கல கலத்துக் கொண்டிருக்கிறதென்ற அப்பட்டமான உண்மை வெளியுலகுக்குத் தெரியாமலிருக்கவே அவர் முயன்றிருக்கிறார். சூரிய வெளிச்சத்தை கையால் மறைக்கும் முயற்சி இது என்பதை அவருக்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

ஒப்சேவர் கட்டுரையாளர் கிளப்பியுள்ள மற்றைய வாதங்களை அடுத்த வாரம் அக்கு வேறு ஆணி வேறாக அலசுவோம்;

## தமிழினம்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சுய ஆட்சியைக் கொடுப்பதற்கு ஏற்றுக் கொண்டார்கள். முதன் முதலாகக் காலஞ்சென்ற பிரதமர் திருவாளர் பண்டாரநாயக்க அவர்கள் பிரதேச சபையை ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பிரதேச சபையைக் கொடுப்பதாகக் கையெழுத்துப் போட்டார்கள். அந்தப் பிரதேச சபை இயங்குவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்ய சபையொன்று இயங்கியது. பின்னர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு திரும்பவும் தாமே அந்த ஒப்பந்தத்தைத் தனிப்பட்ட முறையில் கிழித்தெறிந்தார்கள்.

அதற்குப் பின் அரசாங்கத்தைக் கைப்பற்றிய சிறீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் அவர்கள் தம்முடைய கணவனுடைய கொள்கையைத் தாம் நிறைவேற்றி வைப்பதாக வாக்குறுதி கொடுத்துக் காலந்தாழ்த்தி வந்தார்கள்.

## தமிழினத்தின் ...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரச்சினையில் அரசாங்கம் தாமதமின்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். மாவட்ட சபை மசோதா கைவிடப் பட்டவுடன் நாம் ஏன் அரசாங்கத்தை விட்டுவெளியேறவில்லையென்று இச்சபையிலே கேட்கப்பட்டது. உடுப்பிட்டி, கல்குடா எம். பிக்கள் இக்கேள்வியை கேட்டார்கள். மூன்றுண்டுகளில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டுவெளியேறும் என்று தான் குறிசொன்னதாக கல்குடா எம். பி. கூறினார்.

### குறி சொல்லத் தேவையில்லை

இதற்கு எவ்வித குறியும் சொல்லத் தேவையில்லையென்று நான் திரு. தேவநாயகத்துக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் எப்படி நடந்திருக்க வேண்டுமோ அப்படி நடக்காதபோது- கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிய போது - இந்நாட்டுச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசாங்கம் பாரபட்சமாக நடக்கும் போது-தமிழரசுக் கட்சி விரக்தியடைகிறதென்றே, அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போவதாகவோ கூறுவதற்கு எந்தக்குறி சொல்பவரும் தேவையில்லை. இந்நாட்டுத் தமிழ் மக்களின் கருத்தைத் திசை திருப்பிவிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கற்பனையே இந்துப் பல்கலைக்கழகம் என்பதாகும். இந்துப் பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கு இராமநாதன் தர்மசாதனச் சொத்துக்களும் நாவலர் சொத்துக்களும் பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கையின் பேரில் இந்தக் கற்பனை கட்டியெழுப்பப் பட்டு வருகிறது. இந்தக் கட்டுக்கதையை நான் அம்பலப் படுத்தவிரும்புகிறேன். ஒரு பல்கலைக்கழகத்தில் இரு பேராசிரியர்களுக்கு அல்லது ஒரு விரிவுரையாளருக்கும் ஒரு பேராசிரியருக்கும் சம்பளம் கொடுப்பதற்கு கூட இராமநாதன் தர்மசாதனச் சொத்துக்களும், நாவலர் சொத்துக்களும் போதாது என்று கூற விரும்புகிறேன். இராமநாதன் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் ஒரு பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பதற்கு போதுமானதாகும் என்ற கருத்தை நிறுவுவதற்கு உடுப்பிட்டிப் பிர-திநிதி முயற்சித்தார். இச்சொத்துக்களின் வருமானங்கள் பல்கலைக் கழகத்தின் உத்தியோகத்தர்களில் ஒருபகுதியினருக்குக் கூட சம்பளம் கொடுப்பதற்கு போதாதவை.

காலஞ் சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் விட்டுச் சென்ற சொத்துக்கள் தவறுகப் பயன்படுத்தப்படுவதாகவும், அவற்றை பாதுகாத்து நிர்வகிப்பதற்கு உரிமை கோரியும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குக் கொப்பியொன்றில் அவர் விட்டுச் சென்ற சொத்துக்கள் பற்றிய விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவை இவை தான்.

(1) கொழும்பு வாட்பிளேசில் இருக்கும் ஒரு பழைய வீடு.

(3) திருநெல்வேலி சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள அரை ஏக்கர் நிலம்.

(3) கிளிநொச்சியில்சுமார் 400 ஏக்கர் நிலம்.

(4) கொடைக்கானலில் ஒரு வீடு.

இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் ஒரு பேராசிரியருக்கும் விரிவுரையாளருக்கும் அல்லது ஒரு பல்கலைக் கழக உத்தியோகத்தர்களில் சரி அரைவாசிப் பேருக்கும் சம்பளம் கொடுக்கவும் போதாது.

யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் சொத்துக்கள் ஏற்கெனவே அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டு விட்டன அதிலிருந்து கிடைக்கும் வருமானம் யாழ்ப்பாணத்தில் நாவலர் பாடசாலையை நடத்தப் பயன்படுகின்றது. இந்தியாவிலிருக்கும் சொத்துக்கள் அங்குள்ள மூன்று பாடசாலைகளை நடத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இந்துப் பல்கலைக்கழகம் ஒன்றை நடத்துவதற்கு இராமநாதன் சொத்துக்களிலோ, நாவலர் சொத்துக்களிலோ இருந்து உண்மையில் எதுவித வருமானமும் கிடைக்க முடியாதென்பதை இதுதெளிவாக்குகிறது. தேசிய உயர்கல்விச் சட்டத்தின் கீழ் ஓர் இந்துப் பல்கலைக் கழகமோ, அல்லது தமிழ்ப் பல்கலைக் கழகமோ ஏற்பட முடியாது. ஆகவே விரைவில் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவித் தரவேண்டியது அரசாங்கத்தினதும், தேசிய உயர் கல்விச் சபையினதும் கடமை.

தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் இரட்டை நாக்கால் பேசி வருகிறார்கள். பாராளுமன்றத்தில் ஒரு மாதிரியாகவும், யாழ்ப்பாணத்தில் வேறு விதமாகவும் பேசுகிறார்கள். நாம் அரசாங்கத்தைவிட்டு வெளியேறியவுடன், அவர்கள் அரசாங்கத்தை மட்டுமல்ல— ஒவ்வொரு மேடையிலும் எம்மையும் திட்டித் தீர்த்தனர். மாவட்டசபை கிடையாது என்றவுடன் ஏன் உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியேறவில்லையென அவர்கள் அப்போது கேட்டனர்.

மாவட்டசபை மசோதா இல்லையென்றதும் நாம் வெளியேறியிருப்போம். ஆனால் நாம் கோரிய வேறு சில உரிமைகள்குறிப்பாகபல்கலைக்கழகம்—கிடைக்கும் என்று எதிர்பார்த்து காத்து இருந்தோம். தமிழ் மொழிச் சட்ட விதிகள் செம்மையாக அமுல் நடத்தப்படுமென எதிர்பார்த்தோம். இவைகளிலும் நாம் கைவிடப்பட்டோம் என்பதை அறிந்தவுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியாக இயங்க முடிவு செய்தோம்.'

## தமிழ் மன்றம் கோருகிறது!

மத்திய வங்கியில் காலியான காசாளர் எழுதுவினைஞர், உயர் பதவியாளர், பதவிகளுக்கு கேட்கப்பட்டிருந்த தகுதிகளுடன் விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டிருப்பவர்கள், அதுசம்பந்தமான விபரங்களை மத்தியவங்கித் தமிழ் ஊழியர் மன்றத்துக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி மேற்படி மன்றம் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் சுயாட்சி பெறும்வரைக்கும் இலங்கையில் அமைதி ஏற்படாது!

இன்று நாட்டில் தமிழ் மக்களுக்கும் சிங்கள பௌத்த மக்களுக்கும் இடையில் ஒருபிரிவினை நிலவுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. பொலிஸ் இலாகா அதிபர் அவருடைய அறிக்கையின் பல முறை மத்திய பிரதேசமான தலவாக்கலையில், அட்டனில், வதுளையில், வெலிமடையில் நிலவும் நிலைமை பற்றி எடுத்துக் கூறியுள்ளார். நாமும் அங்கு எங்கள் பணிகளை ஆற்ற வருகின்றோம். அப்பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்களின் நன்மையைக் கருதி வருகிறோம்; காத்து வருகிறோம்.

அவ்வித பணியில் ஈடுபட்டவர்கள் என்ற முறையில் நான் சொல்லக்கூடிய விஷயம். அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களும் சந்தோஷமாக, வேற்றுமையின்றி வாழ்ந்து வந்தார்கள் ஏதோ காரணத்துக்காக, அரசியல் சூழ்ச்சியின் காரணமாக அந்த மக்கள் மனதில் சிங்களவன், தமிழன் என்ற பிரிவினை, சிங்கள மக்கள் தமிழ்ப்படம் பார்க்க கூடாதென்ற விஷம் தூவப்பட்டிருக்கிறது.

### என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

இந்த நிலையை ஆக்கியவர் யார்? இந்த அரசாங்கம் அதைப்பற்றி என்ன அறிக்கைவிட்டது? அவற்றையிட்டு விசாரித்து அதற்கான காரணங்கள் என்னவென்று சொன்னார்களா? அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

தமிழ்ப் படத்தைப் பார்க்கும் சிங்கள மக்கள் இருந்தாற்போல், இரவு விடிந்து பகல் நடப்பதுபோல் தமிழ்ப் படம் பார்க்கக் கூடாது, தமிழ்ப் படம் காட்டக் கூடாது என்று சொல்வது நாம் உணரக் கூடிய ஒரு விஷயமல்ல. உண்மையாகவே சந்தோஷமாகவாழ்ந்த தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இருந்தாற்போல்படம் பார்ப்பதில்வித்தியாசம் காட்டுவார்கள் என்பதை நாம் நம்ப முடியாது.

பட மாளிகைகளிற்போய், படம் காட்டிக் கொண்டிருக்கும் போதே அதனை நிற்பாட்டுகின்றார்கள். எனவே தமிழ்ப்படங்களைக் காட்டுவதற்காக படமாளிகை முகாமையாளர்பொலிஸ்கள் உதவியைத் தேடி வருகிறார். பொலிஸ் உதவியை தேடி வரும் அவர்களுக்கு 'சமாதானத்துக்குப் பங்கம் வராத முறையில் இரு சாராரும் நடக்க வேண்டும், எனவே படமாளிகையைக் கொஞ்சக் காலத்துக்கு மூடி வையுங்கள்' என்று பொலிஸார் கூறுகின்றனர்.

### வேதனைக்குரிய விடயம்

அனுராதபுரியில் நடந்து இருக்கின்றது; மின்னேரியில் நடந்து இருக்கின்றது. அட்டனில், தலவாக்கலையில் வதுளையில் நடந்திருக்கின்றது. இன்று அங்கெல்லாம் இந்த நிலைமை நிலவி வருகின்றதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

தமிழ்ப்படம், சிங்களப் படம் என்று இன்று இங்கு அங்கத்தவர்கள் கூடப் பேசுகின்றார்கள் இந்தப் பேச்சு சிங்கள மக்களின் மத்தியில் போனால் என்னமாதிரியான நிலைமை ஏற்படும் என்பதை நாம் யோசிக்க வேண்டும். கலை, கலாச்சாரத்தை வளர்க்கின்ற நேரத்தில், கலையைப் பற்றி, கலாசாரத்தைப் பற்றிப் புகழ்ந்து வருகின்ற நேரத்தில், அதைப் பற்றிக் கவனிக்காமல், இது தமிழ்ப் படம், இது சிங்களப் படம் என்று பேசி மக்களின் மனதில் இடைஞ்சலை உண்டாக்குகிறார்கள். இது எவ்வளவு வேதனைக்குரிய காரியம்.

அத்துடன் நான் ஒரு தமிழன்—சைவ சமயத்தவன்—என்ற முறையிலே வேதனைப் படுகிறேன். அதாவது, கதிர்காமக் கந்தனுடைய ஆலயத்தை, இதுவரைகாலமும் இந்துக்களால் பரிபாலிக்கப்பட்டுவந்த ஆலயத்தைச் சிங்கள மக்கள் கைப்பற்றியிருக்கிறார்கள் என்று கூறுவதைக் கேட்டால் எவ்

கப் பிரிந்திருக்கின்றன. எத்தனையோ மக்கள் தங்களுடைய நாட்டைப் பிரித்து அரசாள வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆந்திராப் பிரதேசத்திலேயுள்ளது. தெலுங்கானா என்ற பகுதி. அப்பகுதி மக்கள் தமக்கு அப்பகுதியைத் தரும்படி கேட்கிறார்கள். இந்தியாவின் மலைப்பிரதேசத்திலேயிருக்கின்ற ஒருபகுதி மக்கள் அப்பகுதியைக் கேட்டுப் பெற்றுவிட்டார்கள்.

கல்வி அறிவில் தேர்ந்த மக்கள் இருக்கின்ற நாட்டிலே — சிங்கள மக்களும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்த இந்நாட்டிலே — இவ்வித கோரிக்கை ஏன் கேட்கப்படுகின்றதென்பதை நாங்கள் சற்று யோசிக்கவேண்டும்.

புக்களை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன.

"There had been some violent manifestations in the last few years of the new wave of nationalist feeling in Wales. Welsh parties advocate Dominion Status for Wales. While others call for complete separation from United Kingdom. And the reason that has been given is this."

வேல்சு மக்கள் தங்கள் மொழியைப் பேசினால் தான், அந்த மொழி தங்களுடையது என்று கருதி கருமம் ஆற்றினால் தான் தாங்கள் வேல்சு மக்களாக இருக்கமுடியுமென்று காரணத்தை, அந்த அபிலாசையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

யுடன் இருந்தார்களானால் அதனைப் பெறத் திரும்பவும் போராடி வருகிறார்கள். வேல்சு மக்கள் தங்கள் சுதந்திர வாழ்க்கையைத் திரும்பவும் பெறப் போராடுகிறார்கள். அந்த நிலைமைதான் இலங்கையில் தோன்றியிருக்கின்றது.

### சுயாட்சி வேண்டும்

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சகோதரர்கள். இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குத் தமிழ் அரசர்கள் இருந்தார்கள்; சிங்கள மக்களுக்குச் சிங்கள அரசர்கள் இருந்தார்கள். இரு அரசர்களையும் அகற்றி அந்நிய ஆட்சிவந்தது. அந்நிய ஆட்சி இந்த நாட்டைவிட்டு வெளியேறியதன் பின்னர் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களும் சிங்களமக்களும் சகோதரர்களாக வாழவேண்டுமென்றால், சிங்கள மக்கள சிங்களப பிரதேசத்தையும் தமிழ் மக்கள் தமிழ்ப் பிரதேசத்தையும் ஆளவேண்டிய நிலைமை — இரு பிரதேசங்களைக் கொண்ட இலங்கை மாதாவை ஈரினங்களும் ஆளவேண்டிய நிலைமை—ஏற்படவேண்டும். அவ்விதம் ஏற்

## வேல்ஸ் மக்களின் போராட்டத்தை யொத்ததே தமிழ் பேசும் மக்களின் விடுதலைக் கிளர்ச்சி!

வளவு வேதனைக்குரிய விடயமாக இருக்கியது. உங்களுடைய ஒரு தேவாலயத்தை இன்னொரு மதத்தவர் கைப்பற்றினார் என்று உங்களுக்குச் சொன்னால் நீங்கள் தாங்கிக்கொண்டிருப்பீர்களா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? அதை யோசித்துப்பாருங்கள். இன்னும் இப்படியாக எத்தனையோ விடங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம்.

### எப்படி சொல்லலாம்?

1965ஆம் ஆண்டு, 1966 ஆம் ஆண்டு, 1967 ஆம்-

சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இந்தப் பிணி வந்ததன் காரணமாகத்தான அன்று தமிழர்களின் தலைவர் என்று சொல்லப்பட்ட திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஐம்பதுக்கைம்பது கேட்டார். அது ஒரு பரிகாரம் என்று நினைத்துக் கேட்டார். அதைப் பெறவில்லை; அந்தப் பரிகாரம் தமிழ் மக்களுக்குக் கிட்டவில்லை.

### சமஷ்டி கோரிக்கை ஏன் எழுந்தது

அதுகிட்டாததையடுத்துத் தான் தற்போதைய பிரதமரின் பிதா டீ. எஸ். சேன

"Perhaps a Powerful propellent to national disunity is the relative indifference of the British Government to the Welsh problems."

அந்த எழுத்தாளர் சொல்கிறார்: வேல்சு மக்கள் மத்தியில் இன்று நிலவும் நிலைமைக்குக் காரணம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வேல்சு மக்களுடைய அபிலாசைகளைத் தீர்க்க ஒன்றும் செய்யவில்லை என்பதாகும்.

### இங்கும் அதே காரணம்

அதே காரணம் தான் இங்கும் நிலவுகின்றது. வேல்சு மக்களுடைய அபிலாசைகளைப் பிரிட்டிஷ் மக்கள்

பட்டாலேயொழிய இந்த நாடு முன்னேற முடியாது.

செனட்டர் ஹமீம்:— தமிழர்களின் கீழ் சிறுபான்மையினராக எம்மை வைத்திருக்கப்பார்க்கிறீர்கள்!

நடராசா:— உலகத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஏற்பட்ட பிரச்சினை இது. அந்தந்த நாட்டிலுள்ள மக்களுடன் முஸ்லிம்கள் இணைந்தே வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அவர்களது வரலாறே எடுத்துக் கூறுகிறது. தென்னிந்தியாவில் தமிழர்களுடன் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு

## கதிர்காம ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டது சிங்கள வெறியின் உச்சக் கட்டம்

ஆண்டுகளிலே இந்த நிலைமை இருக்கவில்லை, என்று டட்லி சேனநாயக்க அவர்கள் தமது மனதை மாற்றிக்கொண்டாரோ, என்று அவருடைய வாக்குறுதியை ஒப்பேற்றாமல் விட்டாரோ, என்று தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கமாட்டாரென்று சிங்கள மக்களுக்குக் காட்டிக்கொண்டாரோ அன்று தான் இந்தச் சௌஜன்யம் அழிந்தொழிந்தது.

இன்று தமிழ் மக்களைஒழித்துக்கட்ட வேண்டுமென்ற மனப்பான்மை மக்கள் மத்தியிலே நிலவக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எப்படி நாம் இந்த அரசாங்கத்தைத் தேசிய அரசாங்கம் என்று சொல்ல முடியுமென்றுதான் கேட்கின்றேன். இந்த மாதிரியான விடயங்கள் இரண்டு இனங்கள், அல்லது மூன்று இனங்களால் ஒருமித்து ஆக்கப்பட்ட அரசாங்கங்களிலே நடந்துகொண்டுதான் வருகின்றன.

### தெலிங்கானா கிளர்ச்சி

அகில உலகத்தையும் எடுத்துப் பாருங்கள். அடிமை நாடுகளாக வாழுகின்ற நாடுகள் சுதந்திரம் பெறப் போராடுகின்றன. இந்தியாவிலே எத்தனையோ மாகாணங்கள் மாகாண வாரியா

நாயக்க அவர்கள் தமிழனுக்கு முதல் அடியை அடித்தார். மலைநாட்டில் வாழுகின்ற தமிழ் மக்களைப் பிரித்து அவர்களுடைய பிரசா உரிமையை — வாக்குரிமையை அகற்றுவதற்காக அவர் அடித்த அந்த முதல் அடியைக் கண்டு, ஏனைய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள், "நாம் ஒரு இனமாக வாழவேண்டுமென்றால் சமஷ்டி அரசுதான்வேண்டு"மென்று கோரினார்கள்; கோரியும் வருகிறார்கள்.

இங்கிலாந்து ஸ்கொட்ஸ், வேல்ஸ் என்ற மூன்று மாகாணங்களிலேயும் மூன்று மொழிகளைப் பேசி வரும்[illegible]

பூர்த்தி செய்யாததன் காரணமாக—முன்பு தனி இனமாக வாழ்ந்த வேல்சு மக்கள் ஒருமித்துச் சேர்ந்தது. 1262ஆம் ஆண்டு —ஏறக்குறைய 700 ஆண்டளவுக்குப் பின் தாங்கள் தனி இனமாகத் தனித்தியங்கவேண்டும், தங்கள் அரசு இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கின்றனர்.

நாம் இந்த நாட்டில் எங்கள் உரிமையை இழந்தது 1815ஆம் ஆண்டு. 150, 160 ஆண்டுகளுக்கு முன் நாம் சுதந்திரமாக இருந்தவர்கள். அரசுரிமையுடன் இருந்தவர்கள். நாம் தமிழ் மன்னன் ஆண்ட நிலத்தில் பிறந்தவர்

சுதந்திரத்துக்கு போரிட்டார்கள். வடக்கு, மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களோ ஒன்றுபட்டு பாகிஸ்தானை உருவாக்கினர்.

"உலகின் சகலபகுதிகளிலும் வாழும் முஸ்லிம் பெருமக்களின்வரலாறு இதுதான். முஸ்லிம்கள் இணைந்தே நிற்கிறார்கள் என்பது வரலாற்று உண்மை!

ஹமீம்:— என்ன கோரிக்கை?

நடராசா:— சமஷ்டிக் கோரிக்கை!

ஹமீம்:— விழல் பேச்சு

## மூதவையில் நடராசா முழக்கம்!

மக்கள், ஒருமித்து ஒரு இனமாக ஆட்சியை நடாத்துகின்ற நேரத்திலே, வேல்ஸ் மக்கள் தங்களுடைய நாடு ஒரு தனி நாடாக இருக்க வேண்டும், வேல்ஷ் பாஷை மூலம் வேல்ஸ் நாடு பரிபாலிக்கப்படவேண்டும் என்ற அபிலாசையை எடுத்துக்கூறி அதற்குப் போராடி வருகிறார்கள்.

இந்துப் பத்திரிகையில் சில காலத்துக்கு முன் வந்த ஒரு விஷயத்தில் எடுத்த குறிப்

கள். நாம் ஏன் இதைக் கேட்கக் கூடாதென்றுதான் கேட்கிறோம்.

சிங்கள மக்களுக்கு சுதந்திரம் வந்துவிட்டது. சிங்கள மக்களுக்கு இருக்கும் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றதென்று சொல்ல முடியாது. மனச்சாட்சியிருந்தால் அப்படிச் சொல்லத் துணியமாட்டீர்கள். உலகத்தில் சிறுபான்மை மக்களோ, பெரும்பான்மை மக்களோ எப்போதாவது அரசுரிமை

நடராசா:— நீங்கள் வடகிழக்குப் பகுதி முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை!

1956 ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ் மக்கள் தங்களுடைய கோரிக்கையை வைத்து — சமஷ்டி அரசுக் கோரிக்கையை வைத்துப் போராடி வந்த காலத்திலே, அந்தப் போராட்டத்தின் பலனாக சிங்களப் பிரமுகர்கள்—சிங்களப் பிரதமர்கள்-

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி படத்தை சுருட்டி வைக்க வேண்டுமாம்!

## தமிழரசு மீது சன் பாய்ச்சல்!

('சமஷ்டி அயோக்கியத் தனம்' என்ற தலைப்பின் கீழ் ஜூலை மாதம் 24ந்திகதி 'சன்' ஆங்கில ஏடு எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் இது)

''திருவாளர் செல்வநாயகம் அன் கம்பெனி மீண்டும் வகுப்புவாதக் கூக்குரலை எழுப்பத்தொடங்கிவிட்டது. அரியணை உரைக்கு தமிழரசுக் கட்சி கொண்டுவந்துள்ள பிரதான திருத்தம் இந்த உண்மையை தெளிவாக்குகிறது.

சமஷ்டிக் கோரிக்கையும் தனித் தமிழ் அரசுக்கான பிரசாரமும் மூன்றாண்டு காலமாக நிறுத்திவைக்கப் பட்டிருந்தன. அவர்கள் தங்கள் போராட்டக் கூக்குரலை குறுகிய காலத்துக்கு நிறுத்தி வைத்துவிட்டு அதிகாரத்தை வைத்துக் கொண்டு தமிழ் இராச்சியத்தை அமைப்பதற்கு மிக முக்கியமாகத் தேவைப்பட்டதென கருதப் பட்ட பல சலுகைகளை தந்திரமாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதில் அதிக இலாபம் அவர்களுக்கு எதுவென்றால் வடமாகாண அரசாங்க நிர்வாகத்தை தமிழில் நடத்துவதற்கு அவர்கள் பெற்றுள்ள உரிமையாகும். தமிழ் மொழி (விசேட) சட்டத்தின் கீழ் இதற்கு அதிகாரமளிக்கும் ஏராளமான பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவர்களது இராசதந்திரத்தின் ஒரு பகுதியே இது என்பது இப்போது எமக்கு விளங்குகிறது.

''மாவட்டசபைக்கு எதிராக தென்னிலங்கையில் அபிப்பிராயம் வளர்ந்து பிரதமரை நெருக்கி மாவட்ட சபைத் திட்டத்தை கைவிட வைக்கும் வரையில் செல்வநாயகம் அன் கம்பெனியார் தங்கள் இராசதந்திரத்தை செயற்படுத்தி ஒன்றுக்குப் பின் ஒன்றாக பல சலுகைகளைப் பெறுவதில் ஈடுபட்டிருந்தனர்.

''அரசாங்கத்துக்குச் சில காலம் நிபந்தனையுடன் ஆதரவு அளித்த பின்னர் தமிழரசுக்கட்சி சூடான அரசியற் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியிருக்கிறது.

''1965-ம் ஆண்டுக்கு முந்திய நிலையிலிருந்து தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் செயற்பட வேண்டுமென்பதையே அரியணை உரைக்குத் தமிழரசுக்கட்சி சமர்ப்பித்துள்ள பிரதான திருத்தம் தெளிவாக்குகிறதென்பதில் எவ்வித இரகசியமுமில்லை.

''உதவி மந்திரி ஷெல்டன் ஜெயசிங்க பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சிக்கு அளித்தபதில், ஒற்றையாட்சி அரசாங்கத்தை அழித்தொழிக்க விரும்பும் எந்த முயற்சியையும் கிள்ளியெறிய விரும்பும் தேசிய சக்திகளுக்குச் சங்கீதம்போல இனிக்கும் என்பதில் சந்தேகமில்லை

''தமிழரசுக் கட்சிக்கும் ஏனையவர்களுக்கு மிடையேயுள்ள போராட்டம் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் போராட்டமாகும்.

''சமஷ்டிக் கட்சியை இல்லாமற் செய்வதற்கு ஒரு குறுக்கு வழியை நாட்டு மக்கள் கண்டு பிடிக்கும்வரை இந்த யோதல் இருந்து கொண்டேயிருக்கும்!

''உலகம் முழுவதும் மாறி வரும்போது சமஷ்டிக்கட்சி மட்டும் அதனுடைய அரசியல் கொள்கையில் இன்னும் தொங்கிக் கொண்டிருக்கிறது;

''மலேசியாவில் நடைபெற்ற சம்பவங்களை எண்ணிப் பார்த்து, அரசியல் விவேகத்துடனும்' புத்தி சாலித்தனத்துடனும் பிரிவினை வாதிகள் நடந்து கொள்ள வேண்டும். திரு. செல்வநாயகம் அவர்களே! தயவு செய்து அந்தச் சமஷ்டிப் படத்தைச் சுருட்டி வையுங்கள்!

## மக்கள் குரல்

# நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் நடந்ததென்ன?

சிலவாரங்களுக்கு முன்பு நீதியரசர் ஜீ. ஜீ. மீது பாய்ச்சல் என்ற தலையங்கத்தில் சுதந்திரனில் வந்த செய்தியையும் அதன் பின் சென்ற வாரம் அச்செய்திக்கு திரு. சிறீகாந்தா மறுப்பு தெரிவித்து சுதந்திரனில் எழுதிய கடிதத்தையும் வாசித்தேன்.

சரஸ்வதி மண்டபத்தில் 'நாவலர் சிலை வழியனுப்பு விழாவில்' ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஈரிய கொல்லை பற்றிப் பேசிய கருத்தை மறுத்து அதே மேடையிலேயே ஈரிய கொல்லைக்காகப் பரிந்து பேசிய சிறீகாந்தா அவர்கள் தானு, இம் மறுப்புக் கடிதம் எழுதினுர் என்று எண்ணும்போது வியப்பை அளிக்கின்றது.

சரஸ்வதி மண்டபத்திலே நாவலர் சிலை வழியனுப்பு விழாவிலே நடந்த உண்மைச் சம்பவத்தை நான் நேரில் அறிந்தவற்றை (அதாவது நேரில் கண்டு கேட்டதை) உங்கள் முன் கூறுகிறேன். உண்மையை உணருங்கள்.

நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் தலைவர் உரைக்குப் பின் பிரதம மந்திரியவர்கள் பேசினுர்கள். அதன் பின் திரு. ஜீ. ஜீ. பொன்னப்பலம் அவர்கள் பேசினுர்கள். பொன்னம்பலம் பேசும்போது நாவலர் பற்றி சிறிது பேசிவிட்டு அதன் பின், இந்து பல்கலைக் கழகம் பற்றியும், ஈரியகொலை பற்றியும் பேசத் தொடங்கினுர். அப்பொழுது தலைவராகிய நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது இருக்கையை விட்டு எழுந்து வந்து திரு. பொன்னம்பலத்தின் கையைப் பிடித்து அவரிடம் ஏதோ சொன்னுர். அப்பொழுது பொன்னம்பலம் நேரம் செல்வதாகவும் தனது பேச்சை முடிக்கும்படி நீதியரசர் கூறியதாகவும் பொதுமக்களிடம்கூறி அதன் பின் ஒரு சில வார்த்தைகள் பேசி தனது பேச்சை முடித்தார்.

அதன் பின் அடுத்த பேச்சாளரை அறிவிக்க வந்த நீதியரசர், திரு. பொன்னம்பலம் நாவலர் விழாவுக்கு அப்பாற்பட்ட அரசியல் விஷயங்களை இந்த மேடைக்குக் கொண்டு வந்து விட்டாரென்றும் அதற்காகத் தான் நாவலர் சபையின் சார்பில் பொது மக்களிடம் மன்னிப்புக்கோருவதாகவும் கூறினுர்

தொடர்ந்துபேசியசெனற்றர் நீதிராசா, சிறீகாந்தா ஆகியோரும் பொன்னம்பலம் கூற்றை மறுத்துப் பேசினுர்கள்.

மேடையில் இருந்த பிரதம மந்திரியவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக நாவலர் சிலையனுப்பு விழாவில் திரு. பொன்னம்பலத்தின் கூற்றை மறுத்ததுடன் கல்வி மந்திரி ஈரியகொலையைப் புகழ்ந்த சிறீகாந்தா அவர்கள் இன்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக சுதந்திரன் செய்திக்கு மறுப்புக் கடிதம் எழுதின காரணத்தினுல் ஒருபோதும் உண்மைச் செய்தியை மறைக்க முடியாது.

என்னைப் போன்று நேரில் சமூகம் கொடுத்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் மூலம் இலங்கை வாழ் தமிழ் மக்கள் யாவரும் உண்மைச் செய்தியை அறிந்தே தீருவார்கள். ஆகவே சிறந்த கல்விமான், சமயத் தொண்டன், சைவத்துக்கும் தமிழுக்கும் அஞ்சா நெஞ்சத்துடன் உண்மையையே பேசித் தொண்டாற்றிய நாவலர் பெருமானின் நாவலர்சபை இணைக்காரியதரிசி அத்துடன் அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவி வகிக்கும், திரு. சிறீகாந்தா அவர்கள் திரு. பொன்னம்பலத்துக்காக உண்மையை மூடி மறைக்க முற்பட்டது எம்போன்றவர்கட்கு மிக மிக வேதனை அளிக்கின்றது.

க. அருளானந்தம்

குரு இல்லம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

## இழந்த நாட்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ளத்தில் மலர்ந்த அன்பின் விளைச்சலே அது என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். உளப்பண்பாடே தமிழ்ப்பண்பாடு.

மேனுட்டு மன்னர்களெல்லாம் கொடிகளிலே பூத்த மலர்களைப்பறித்து மாலைகளாகத் தொடுத்துத் தங்கள் தேர்களை அலங்கரித்துசொகுசாக அத்தேர்களில் உட்கார்ந்து பவனிபோன காலத்தில் தான் சொகுசாக உட்கார்ந்து போன தேரை மலர்க் கொடிஒன்றுக் குத்துணையாக நிறுத்திவிட்டு தன் அடிகள் நொந்திட நடந்து சென்றவன் தமிழன்.

ஏனைய நாட்டு மன்னர்கள் எல்லாம் மயிற் சிறகுகளைக் கொய்து எடுத்து தங்கள் உடற் சுகத்துக்காக விசிறி செய்து மயிற் சிறகால்காற்று வீசச் செய்து மகிழ்ச்சி அனுபவித்த காலத்தில், தன் உடலுக்குச் சுகம் தந்த போர்வையை குளிரால் வாடிய மயில் ஒன்றுக்கு போர்த்தி மகிழ்ந்தவன் தமிழன்:

### ஒருவனுக்கு ஒருத்தி

தமிழனுடைய உள்ளத்தின் உள்ளே உருவாகிய பண்பாடு தனிச் சிறப்புடையதாகும். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பது தமிழனுடைய பண்பாடு மேனுடுகளில் இன்று உள்ள குழப்பங்களுக்கெல்லாம் இந்த அழகான பண்பாடு அங்கு இல்லாததே காரணம் என்பேன். ஆடவனொருவன் ஐந்து பெண்களோடு வாழ்ந்து தன்னை நன்கு குழப்பிக்கொண்டு வருகிருன். பெண் ஒருத்தியும் ஐந்து ஆடவர்களோடு வாழ்ந்து தன்னைக் குழப்பிக் கொண்டு வருகிருள். இந்த இருவரும் திருமணம் செய்து கொள்கிருர்கள். எப்படியாவது வாழ்ந்து விட்டுப்போனுல் சரி-அன்பு என்பதெல்லாம் பொய்-ஆரை ஏமாற்றியாவது இன்பம் அனுபவித்தால் போதும்-என்ற மன நிலையில் இணையும் இந்த இருவருக்கும் உருவாகும் குழந்தை எப்படி உருவாகும் என்று நினைக்கிறீர்கள்? அந்தக்குழந்தை கொலை செய்யவும் தயாரான குழந்தையாக-கொடுமைகளுக்கு அஞ்சாத குழந்தையாக- குழப்பமான ஒரு குழந்தையாகவே வரும்-வளரும்- வாழும் ஆம் நண்பர்களே!...இந்தக் குழந்தைதான் இன்று அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் அணுக்குண்டு செய்கின்ற குழந்தை: இந்தக் குழந்தைதான் இன்றுதன் மனக் குழப்பத்தைத் தானே தாங்கிக் கொள்ள முடியாமல் கலைந்த கூந்தலோடும் தளர்ந்த உடலோடும்செட்டித்தெருவுக்கு வந்து சுற்றுகிற குழந்தை: ஆனுல், ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் தமிழ்ப்பண்பாட்டில் உருவாகின்ற குழந்தையோ இருவர் ஏங்கி ஏங்கி வளர்த்த அன்பின் அறுவடையாகப் பிறந்து இந்த மாநிலம் முழுவதையுமே அன்பில் தோய்த்தெடுக்கும் குழந்தையாக விளங்கும்!

### தமிழே உலகைக் காக்கும்

உலகம் ஒவ்வொரு மணித்துளியும் அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் மொழியும் தமிழ்க்கலையும் தமிழ்ப்பண்பாடும் உலகம் முழுவதையுமே காப்பாற்றும் தகுதியுடையனவாக விளங்குகின்றன. எனவேதான் இந்த மொழி உலகம் முழுவதையுமே ஆளவேண்டும் என்று கவியோகி சுத்தானந்த பாரதி கனவு கண்டார். 'தமிழ் இனிதோங்குக! தமிழ் உலகாளுக! தமிழகம் உலகத் தாயகம் ஆகுக, என்ருர கவியோகி அவர்கள்.

தமிழ்த்தாய் மன்றம் தமிழுக்கு வாழ்வு வேண்டும் என்பதற்காகத் தமிழ் இளைஞர்கள் எடுத்த மன்றம். இது ஒரு முழுக் கலை கலாச்சார மன்றம் என்ருலும் இதன் உயிர் தமிழ் இனத்தின் அன்ருட வாழ்வோடு இணைந்து நிற்கும் என்பதை மறந்து விடாதீர்கள். பத்தாயிரம் இளைஞர்கள் எங்களுக்குத் தேவை. ஒரமைப்புக்குக் கட்டுப்பட்டு உறுதியாகத் தமிழ் வாழ்வுக்காக தங்களை ஈடுபடுத்தக்கூடிய பத்தாயிரம் இளைஞர்கள் தேவை!

### ஒத்துழைப்பு தாரீர்

தமிழ் அன்னைக்கு ஒரு நிலையான வடிவம் கொடுத்து சிலை அமைத்து தமிழர் தம் வழிவழித் தாயகமான திருக்கோணமலையில் கோயில் செய்து அங்குதமிழன்னையின்சிலையை நாட்டவும் ஆண்டு தோறும் திருக்கோணமலையில் 'கூடல்' நடத்தவும் தமிழ்த் தாய் மன்றம் முடிவு செய்திருக்கிறது. பெரிய திட்டம் போட்டிருக்கிருேம். ஆனுல் பிச்சைக்காரர்கள்!

தமிழ்த் தாய் மன்றத்தின் உணர்ச்சியும் உள்ளத்துடிப்பும் தமிழ்பேசும் மக்களுக்குப் புரிந்துவிட்டால் - அந்த ஒன்றே எங்களுக்குப் போதுமானதாகும். கையிலே திட்டம் வைத்திருக்கிருேம். பையிலே பணமில்லை! துடிப்பான வீரர்களை மன்றத்தில் வைத்திருக்கிருேம்- தூக்கிவிட நாலுபேர் தேவை: முத தமிழ் வாழ்வுக்கா [illegible] [illegible] இளைஞருக்கு ஒத்துழைப்பும் தர வாரீர் என உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (20-7-69ல் தமிழ்த் தாய் மன்ற முதலாவது மாநில மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை )


## மாயாஜாலம்

காரியம் கைகூடிய பின் பணம் செலுத்துங்கள் நம்பிக்கையான மலையாள மாயாஜால வசிகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினுல் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்துவைக்கப்படும். மற்ற எல்லாவித மந்திரங்களும் எங்களால் செய்யப்படும். இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

நீலன் கந்தசாமி மந்திரவாதி
நிட்டம்புவ

## ஸ்ரீராம வாசனை புகையை பாவியுங்கள்

வீடுகளில் பிணிகள் நீங்கி நன்மை உண்டாக வியாபாரம் மேலோங்க 1 மாதத்துக்குரிய புகை 3/75 கொடுத்து வாங்கி பாவியுங்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது


செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்) ஈரோஸ் (பாமன்கடை)

ஏ.வி.எம். ராஜன், புஷ்பலதா, டி. கே. பகவதி, அஞ்சலிதேவி, சிவகுமார், கீதாஞ்சலி, நாகேஷ், வி. எஸ். ராகவன் நடிக்கும்

# பால் குடம்

திரைக் கதை இயக்குநர் மேற்பார்வை கிருஷ்ணன் பஞ்சு

இயக்குநர் பட்டு




இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெபிட்டி —(கொழும்பு) வின்சர் —(யாழ்நகர்)

கே. பாலசந்தரின்

## தாமரை நெஞ்சம்

# ஜனவெள்ளம் பெருக்கெடுத்த வண்ணம்! காட்சியளிக்கிறது!!



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டுநகர்)

நடிகர்திலகம் ★ சிவாஜிகணேஷன் (இரு வேடங்களில்)

கவர்ச்சிக்கன்னி ★ஜெயலலிதா

என். எம். நம்பியார் வசந்தா சௌகார்ஜானகி நாகேஷ் மனோரமா

மற்றும் பலர் நடித்த

சிவாஜிகணேஷன் அளிக்கும் அருள் பிரசாத் மூவிஸ்

# எங்க ஊர் ராஜா

கதை வசனம் பாலமுருகன் — டைரக்ஷன் P. மாதவன் — இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

எதிர்பாருங்கள்!!

எம். ஜி. ஆர். ஜெயலலிதா மனோகர் சோ நடித்த

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

## அடிமைப் பெண்

(ஈஸ்ட்மன் கலர்)



# இரண்டாவது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) மொடேர்ன் (பதுளை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) வெம்பிளி (கண்டி)

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கவர்ச்சிநடிகை ஜெயலலிதா அசோகன், விஜயகுமாரி, மனோகர், மனோரம்மா, சோ, வசந்தா, நடிக்கும்

வள்ளி பிலிம்ஸ்

# கணவன்

கதை: எம். ஜி. ஆர். — டைரக்ஷன் ப. நீலகண்டன்

4 வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

## நினைவில் நின்றவள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411